www.tamilarangam.net

# பாலம்

நவம்பர் 1987

விலை ரூ. 1.50



□

தெருக் கூத்துப்பற்றி

செ. யோகநாதன்

விடுதலைப் போரின்
மறுபக்கம்

□

'சிரியா'வில்
நடப்பதென்ன ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நவம்பர் 15 — நாடற்றவர் நாள்

# துரோகத் தனங்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவோம்

1986ம் ஆண்டு திரண்டெழுந்த தோட்டத் தொழிலாளர்களின் எதிர்ப்புணர்வை மழுங்கடிப்பதற்காக 94 ஆயிரம் பேருக்கு பிரஜாவுரிமை வழங்குவதாக வாக்குறுதியளித்தார் ஜனாதிபதி ஜெயவர்த்தனா. நடந்தது என்ன? வாக்குறுதி அப்படியே காற்றில் பறக்க விடப்பட்டுவிட்டது. இன்று 4½ லட்சம் தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்கள் பிரஜாவுரிமை யற்றவர்களாக அங்கு வாழ்ந்து கொண்டிருப்பது மட்டுமல்ல, ஜே.ஆர் — ராஜீவ் ஒப்பந்தத்தின் கீழ் 2 லட்சம் பேர் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு நாடுகடத்தப்படவும் வழிவகுக்கப்பட்டுள்ளது. இத்தகைய துரோகத் தனங்கள் ஈழம் வாழ் தோட்டத் தொழிலாளருக்கு இன்றோ நேற்றோ அறிமுகமானவையல்ல. 1948 நவம்பர் 15ம் நாள் பத்து லட்சம் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமையை பறித்தும், அடுத்த ஆண்டு அவர்களது வாக்குரிமையை பறித்தும் அவர்களை சொந்த மண்ணிலேயே முகமற்ற அனாதைகளாக்கியது சிறிலங்கா அரசு.

நூற்றாண்டின் முற்பகுதியில் அதாவது 1823 முதல் பிரித்தானியரால் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட கோப்பி, தேயிலை பெருந்தோட்ட பயிர்ச் செய்கைக்காக தென்னகத்திலிருந்து இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் தான் இந்தத் தொழிலாளர்கள். நூறாண்டு காலமாக வியர்வையும், இரத்தமும் சிந்தி உழைத்து நாட்டின் வருமானத்தில் 80 சதவீதத்தை ஈட்டிக் கொடுத்த இந்தமக்களுக்கு கிடைத்த பரிசுகள் நாடற்றவர் என்ற பட்டமும், நாடுகடத்தல்களுமாகும்.

இம்மக்களின் நியாயபூர்வமான உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது அவ்வப்போது ஆட்சிக்கு வந்த அரசியல் கட்சிகளும், இம்மக்களின் தலைவர்கள் என தம்மைத் தாமே நியமனம் செய்து கொண்டவர்களும் இவர்களைக் காட்டிக் கொடுத்தே அரசியல் நடத்தி வந்திருக்கின்றனர்.

1964ல் செய்யப்பட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் 9,75,000 தொழிலாளர்களில் 5,25,000 பேரை இந்தியா ஏற்பதெனவும் 3,00,000 பேரை இலங்கை ஏற்பதெனவும் முடிவாகியது மீதியாயுள்ள 1,50,000 மக்களைப் பற்றி 1974ல் தீர்மானிப்பதாக முடிவு செய்யப்பட்டது 74ல் இந்திராகாந்தியும், சிறிமாவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் மீதிமக்களை பாதிபாதியாக பிரிப்பதென தீர்மானித்தனர். ஆனால் கணிப்பெடுப்பு நடத்தப்பட்டபோது 7லட்சம் மக்கள் இலங்கையில் வாழ விரும்புவதாகவே தெரிவித்தனர். எனவே இம்மக்களை அவர்கள் தம் மண்ணிலிருந்து விரட்டியடிப்பதற்கான திட்டங்களை தீட்டியது சிறிலங்கா அரசு. 58லும், 77,81,83ம் ஆண்டுகளிலும் இனக்கலவரங்கள் என்ற போர்வையில் திட்டமிடப்பட்ட தாக்குதல்கள் இம்மக்கள் மீது நடத்தப்பட்டன. தோட்டங்களை தேசியமயமாக்கல் என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றங்கள் நிகழ்த்தப்பட்டன.

தம்மை தமது மண்ணிலிருந்து அந்நியப்படுத்த முயற்சிகள் நடந்த போதெல்லாம் இந்த மக்கள் கிளர்ந்தெழுந்து போராடிய வரலாறுகளையே கடந்த காலம் காட்டுகின்றது. 1944ல் முல்லோயா தோட்டத்தில் சிங்களவரை குடியேற்ற அரசு முயற்சித்த போது, அதை எதிர்த்த போராட்டத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட கோவிந்தனையும், 76ல் டெவன் தோட்டத்தை சுவீகரிக்க முயன்ற போது தடுத்து நிறுத்திய மக்கள் போராட்டத்தில் முன்னின்று தன்னுயிரை தியாகம் செய்த சிவனு லெட்சுமணனையும் 83ல் இராகலை தோட்டத்தில் நடந்த போராட்டத்தில் கொலை செய்யப்பட்ட குண சீலனையும் அம்மக்கள் மறந்து விடவில்லை.

இன்று 4½லட்சம் தொழிலாளர்கள் பிரஜா உரிமையற்றிருக்கும் நிலையில் ''2 லட்சம் பேரை இந்தியாவுக்கு அனுப்புவோம்; பிரச்சனை தீர்ந்தது'' என தம்மைத் தாமே திருப்தி படுத்திக் கொள்ளும் 'தலைவர்'களின் மேதா விலாசத்தை என்னவென்பது. இத்தகைய துரோகத் தனங்களுக் கெதிராக கிளர்ந்தெழும் மக்களே நாளைய சமுதாயத்தின் விடிவை உறுதிப்படுத்துவார்கள்; வேறெவருமல்ல.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரண்டு கழுகுகள் □ இரண்டு கழுகுகள்

இரண்டு கழுகுகள் நடுவானத்தில் ஒன்றை ஒன்று கொத்திக் கீறி பயங்கரமாக சண்டை யிட்டுக் கொண்டன.

களைப்புற்ற அவைகள் சிறிது இளைப்பாறுவதற்காக எதிரெதிரே உள்ள மரங்களில் வந்து அமர்ந்தன. அவற்றில் ஒன்று அந்த இடத்திற்குப் பழகிப்போன கழுகு. மற்றொன்று புதியது.

புதிதாக வந்த கழுகு மரங்களில் உள்ள புறாக்களைப் பார்த்துச் சொன்னது :

''அவன் உங்களுக்குப் பெரிதும் கொடுமை செய்திருக்கிறான் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவனை ஒழிக்கப் போகிறேன்.

அது உங்களுக்கு நான் செய்கிற சேவை இல்லையா ? எனவே எனக்கு ஆதரவளித்து நீங்கள் உற்சாகப்படுத்த வேண்டும்."

பழைய கழுகு திரும்பவும் சண்டையிடத் தயாராகவே, புதிய கழுகு பேச்சை நிறுத்தி விட்டுப் பறந்தது.

புறாக்கள் ஒன்று கூடி யோசித்தன. அவை ஒரு முடிவிற்கு வந்தன.

''அந்தக் கழுகு நமக்குக் கொடுமை செய்தது உண்மை. புதிதாக வந்துள்ள இவன் என்னென்ன கொடுமை செய்தான் என்பதை இரைத் தேடச் சென்ற சமயத்தில் மற்ற புறாக்கள் சொல்லி இருக்கின்றன.

இருவரின் அழிவே நமக்கு மகிழ்ச்சி தரக் கூடியது. நம்மால் அதை ஈடேற்ற முடிய வில்லை.

அவைகளே அடித்துக் கொண்டு சாகின்றன. சாகட்டும். இருவரில் எவருக்கும் நம் ஆதரவு இல்லை."

திரும்பவும் புதுக் கழுகு ஓய்வெடுப்பதற்காக மரத்திற்கு வந்தது.

''என்ன முடிவு செய்தீர்கள்?" என்று கழுகு கேட்டது. புறாக்கள் தயங்கின.

தங்களின் முடிவை முக தாட்சண்யமற்று மூர்க்கமாக எப்படிச் சொல்வதென்று தடுமாறின. புத்திசாலியான புறா ஒன்று நளினமாகக் கூறியது :

''உங்களுக்கு ஆதரவு தருகிறோம். ஒரு நிபந்தனை..."

''என்ன ? ''

''உங்கள் மீது எங்களுக்கு நம்பிக்கை விழ வேண்டும். தடையாக இருப்பது உங்களின் கூரிய அலகு.''

''அதை என்ன செய்ய வேண்டும் ?"

''மழுங்கடிக்க வேண்டும். இல்லை, முழுமையாக மாற்றி விடவேண்டும்.''

கோபமுற்ற கழுகு ஆவேசத்துடன் அந்த இடத்தை விட்டுக் கிளம்பியது. தன் பகைக் கழுகை நடு வானத்தில் வைத்து குரூரமாகக் கொத்திக் குதறிக் கொண்டு கூச்சலிட்டது.

□ என். ஆர். தாசன் □ 'நினைவாக்னி' நூலிலிருந்து

---

## காதல்

மஜ்னூனைப் பார்த்து
சட்டையைக்
கிழித்துக் கொள்கிறாய்;
அம்பிகாபதியைப் பார்த்து
அழுது கொள்கிறாய்;
ரோமியோவைப் பார்த்துச்
செத்துக் கொள்கிறாய்;
உன் சட்டயை
நீயாகவே கிழித்துக் கொள்.
உன் கண்ணீரையே
வடி.
நீயாகவே சாகத் தெரிந்து கொள்.
யாரையாவது காதலி, தம்பி!
காதலையே காதலித்துக்
கொண்டிராதே.


அப்துல் ரகுமான்

## □ புத்தகங்கள்

பித்தன் பள்ளிக்கூடத்தின் அருகில்
சென்று கொண்டிருந்தான்.
சிறுவர்கள்
புத்தகத்தை மடியில் வைத்துப்
படித்துக் கொண்டிருந்தார்கள்.
அவன்
புத்தகங்களைப் பார்த்துச்
சொன்னான்:
''சமர்த்தாயிருங்கள் ;
குழந்தைகளைக்
கிழித்து விடாதீர்கள்".

அப்துல் ரகுமான்

www.tamilarangam.net




*அக்டோபர் புரட்சி*
**சிந்தனைகள்**

# 'இராணுவத்தின் படை வீரம்'

*மாக்சிம் கார்க்கி*

ஒருவன் அவனுடைய ராணுவ உடுப்புக்குள் திடுமெனச் சிறைப்படும்போது, அச்சிறை வாழ்க்கை அவனது இயற்பண்புகளை மெல்ல மெல்ல மாற்றுகிறது ; அவன் சுய தகுதியை இழந்து போகிறான். அறிவுத் தேடல் அவனுள் குமையும் போதிலும், போர்த் துறையின் சட்டவிதிகளுக்கு அடிபணிந்து இயற்கையிலேயே படைவீரனாய் இருப்பது போல் அவன் ''எதையும் அறிந்து கொள்ளும்'' தன் ஆற்றலை இழந்து விடுகிறான்.

முதலாளித்துவ ராணுவங்களில் பணி செய்யும் படைவீரன் விவசாயி அல்லது தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனது வர்க்க எதிரிகள் அடக்கியாளும் வஞ்சக எண்ணத்தோடுதான் அவனை 'சிந்தனையற்ற ஜடமாய்' உருவாக்குவதில் பெரிதும் கவனம் செலுத்துகிறார்கள். தனக்கு கிடைக்கும் பிச்சைக் கூலிக்காகவும், இழிந்த ரொட்டித் துண்டுக்காகவும் ஐரோப்பிய படை வீரனாய் இருக்கும் ஒருவன் அவனது எதிரிகளிடமே சிறைபட்டு, அவர்களால் மூளைச்சலவை செய்யப்பட்டு, அடிமைச் சேவகம் புரிந்துவருகிறான். இந்தப் பரிதாபத்துக்குரிய படைவீரர்களும் மனிதர்களே என்பதால், இவர்களின் தந்தைகளும் அன்னையரும், சகோதர்களும், சகோதரிகளும் கடுமையாய் உழைத்து, அதிகவரி செலுத்தி, தமக்காக மட்டுமின்றி ராணுவத்தில் 'அடிமை வீரர்களாக' இருக்கும் தம் மகன்களுக்காகவும், சகோதரர்களுக்காகவும் வாழ்ந்து வருகிறார்கள். வாழ்க்கையின் கோரச் சூழலில் வாழ்வது கொடுமையானபோது, இந்தத் தந்தைகளும், சகோதரர்களும் தமது எதிரிகளுக்கு எதிராய் கிளர்ந்தெழுகிறார்கள். அப்போது, ரத்தச் சொந்தம் என்று கூடப் பார்க்காமல், அந்தப் ''படைவீரர்கள் கலகக்காரர்களை சுட்டுத் தள்ளும் உத்தரவிற்கு'' சிரந்தாழ்த்துகிறார்கள். முதலாளித்துவ வாதிகளால் கலப்பற்ற படு முட்டாள்தனத்தின் அடியாழத்திற்கு இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் அவர்கள் வாழ்வின் சுபிட்சத்திற்காக போராடும் தமது தந்தையரை, சகோதரர்களை நோக்கி தம் ஈவிரக்கமற்ற துப்பாக்கிகளை இயக்குகிறார்கள்.

□

யுத்த அனாதைகளும், கொல்லப்பட்ட தம் தந்தையரின் பேரில் 'பழிவாங்க' எழுந்துள்ளவர்களும் ''கீழ்த்தரமான ரௌடிகளின் இரும்புப் பிடியில் சிக்கிக் கொண்டுள்ள உறுதிமிக்க படைவீரர்கள்'' என்ற நிலையில்தானிருக்கிறார்கள். தங்களின் இன்பக் கேளிக்கைகள் சலிப்பைத் தரும்போதெல்லாம் அந்த 'ரௌடியிச எஜமானர்கள்' படைவீரர்களின் தலைகளையும், கால்களையும் அடித்து நொறுக்கினார்கள். 'பழிவாங்கத் துடிக்கும்' அந்தப் படைவீரர்களின் தலை கிழிக்கப்படும் வரை, அவர்களின் தலைகளில் எஜமானவிசுவாசமும், நச்சுமிக்க மூடத்தனமுமே நிரம்பியிருந்தது. அவர்களிடம் தாய்நிலத்தின் உன்னதங்கள் பற்றி தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்தினார்கள். அத்தகைய உன்னதங்களை பாதுகாக்கும்படி அவர்களுக்கு போதிக்கப்பட்டது. ஆனால் அந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் மகிமையை நாமறிவோம். அவர்கள்-பொறுப்பற்ற, மனிதத் தன்மையற்ற, ரத்தங்குடிக்கும் பைசாசங்களாய் ; துப்பாக்கிகள், சாராயம் முதலியவற்றை தயாரிப்பவர்களாய் ; மற்றும் பல புதிய (?) கலாச்சார மதிப்புகளை தோற்றுவிப்பவர்களாய் செயல்பட்டு வருகிறார்கள்.

□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஐந்து பேர்களின் புத்தகங்களை மட்டுமே வெளியிட்ட ராமகிருஷ்ணன் தமிழின் அதி முக்கிய பதிப்பாளராகிவிட்டார் ?

தமிழில் இலக்கிய அந்தஸ்து அளிக்கக் கூடிய நிலையில் சில இலக்கியத் தரகர்கள் இருக்கிறார்கள். மற்றவர்கள் எடுத்து கூறுவதை மிகைப் படுத்தியோ மட்டுப் படுத்தியோ தான் தங்கள் காலத்தை, வாழ்க்கையை ஓட்டுகிறார்கள். க்ரியா ராமகிருஷ்ணன், மீட்சி பிரம்மராஜன் ஆகியோர் இதில் தலையானவர்கள்.

க்ரியா ராமகிருஷ்ணன் இன்று மிகவும் அதிகமாக காசு பண்ணுபவர். பல்வேறு பன்னாட்டு அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் ஆதரவு ராமகிருஷ்ணனுக்கு இருப்பதால் ஏதோ தமிழில் நவீன இலக்கியமே இவரால் தான் இங்கு சாத்தியப் படுகிறது என்ற ஒரு மாயயை ஏற்படுத்தி, அதில் லாபம் அடைகிறார். சென்ற வருடம், Frankfurt-ல் நடைபெற்ற சர்வதேச புத்தகக் கண்காட்சியில் தமிழ் வெளியீட்டாளர்கள் சார்பில் கலந்து கொள்ள தேர்ந்து எடுக்கப்பட்ட ஒரே ஒரு பதிப்பாளர் ராமகிருஷ்ணன் தான். புதுமைப்பித்தனில் தொடங்கி ராமகிருஷ்ணனிடம் குமஸ்தாவாக பணியாற்றும் கோபி கிருஷ்ணன்வரையில் உள்ள அற்புதச் சிறுகதை எழுத்தாளர்களில், ஐந்து பேர்களின் புத்தகங்களை மட்டுமே வெளியிட்ட ராம கிருஷ்ணன் தமிழின் முக்கிய பதிப்பாளராக மாறிவிட்டார்!

ஜானகிராமனையும், ராஜநாராயணனையும், ஜெயகாந்தனையும், வண்ண நிலவனையும், கா.நா. சு.வையும், இந்திரா பார்த்தசாரதியையும் வெளியிட்ட மீனாட்சிப் புத்தக நிலையம், தமிழ் புத்தகாலயம் போன்றவர்களுக்கு இல்லாத மதிப்பு ராமகிருஷ்ணனுக்கு எப்படி வந்தது என்பது தான் கேள்வி. ராம கிருஷ்ணனிடம் தான், காலம் சென்ற ஜி. நாகராஜனின் எல்லா எழுத்துகளும் இருக்கிறது. ராமகிருஷ்ணன், ஜி. நாகராஜனின் 'நாளை மற்றுமொரு நாளே' என்ற அற்புத நாவலை வெளியிட்டார். அந்த நாவலின் பின் குறிப்பாக சுந்தர ராமசாமி, அப்பொழுது க்ரியாவில் வேலை செய்து வந்த மோகன் ஆகியவர்கள் துணையுடன் ஜி.என். வாழ்க்கை வரலாறு என்னும் பெயரில் அவர் மீது இல்லாததும் பொல்லாததுமாக சகதியை வாரி இறைத்து இருக்கிறார். அதே நேரத்தில், ஜி.என். எழுதிய மற்ற புத்தகங்களின் எழுத்து பிரதியைக் கூட மற்றவர்களுக்குத் தர முன் வருவதில்லை. இவரும் வெளியிடுவதில்லை. எமக்கு தெரிந்தவரையில், 12 சிறு கதைகள், தீரன் மார்க்ஸ் என்ற நாடகம், ''With fate Conspires'' என்ற ஆங்கில நாவல், மூன்று விஞ்ஞானிகள் என்ற தலைப்பில் மார்க்ஸ், டார்வின், கலிலியோ ஆகியோர் பற்றிய நூல் ஆகியவை ராமகிருஷ்ணனிடம் கை பிரதியாகவே இருக்கிறது. க்ரியாவிற்கு நெருக்கமான ஒரு நண்பர் இன்னும் பல ''Non-fiction கைப்பிரதிகள் கூட ராம கிருஷ்ணனிடம் இருப்பதாக கூறுகிறார். ஜி.என். இறந்த பிறகு, ராம கிருஷ்ணன் குறைந்த பட்சம் 50 புத்தகங்களாவது வெளியிட்டிருப்பார். ஆனால் ஜி.என். எழுதியவற்றை வெளியிடமட்டும் அவரால் இயலவில்லை. அசோகமித்திரனின் ''ஒற்றன்'' நாவலை மூன்று வருடங்கள் வைத்து இருந்து விட்டு, அதை வெளியிட மனமில்லாமல், அசோகமித்திரனிடம் திருப்பி அளித்து விட்டார். காரணம், ''ஒற்றன்'' புதிய நாவல் அதன் தரம் அல்லது தரமின்மை பற்றி கருத்துச் சொல்லக் கூடிய அறிவு ராம கிருஷ்ணனுக்கு இல்லை இக் காரணத்தினால் தான், ''ஒற்றனை'' திருப்பி தந்துவிட்டு ஏற்கனவே வேறு ஒருவரால் வெளியிட்டு மிகவும் பிரபலமாகிவிட்ட அசோகமித்தரனின் 'தண்ணீரை' இரண்டாம் பதிப்பாக வெளியிட்டார். ஈழக் கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலனின், ''நமக்கென்று ஒரு புல் வெளி'' புத்தகத்தை வெளியிட இவர் எடுத்துக் கொண்ட காலம், கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற வேண்டிய அளவிற்கு பிரசித்தம். ஜெயபாலனின் இளமையில் எழுதப் பட்ட அந்நூல், ஜெயபாலனின் முதுமையில் வெளிவந்ததாக இலக்கிய நண்பர்கள் பேசிக் கொள்கிறார்கள்.

சார்வாகனின் சிறு கதைகள் ராமகிருஷ்ணனிடம் தான் உள்ளன. கூடிய விரைவில் சார்வாகனின் சிறுகதை தொகுப்பு வரும்'' என்ற க்ரியா விளம்பரம் ஆறு மாதத்திற்கு ஒரு முறை வந்த வண்ணம்இருக்கின்றன.

ஆனால் புத்தகம் வரவில்லை. ஆனாலும் ராமகிருஷ்ணன் தான் தமிழ் நாட்டின் முக்கிய வெளியிட்டாளர் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த ராமகிருஷ்ணன் அலைன்ஸ் பிரான் சைஸ் ஸ்ரீராமின் துணையுடன் பிரெஞ்ச் புத்தகங் களை தமிழில் கொண்டு வந்ததாக பெருமை பட்டுக்கொள்கிறார். சில பிரெஞ்ச் புத்தகங்களை கொண்டு வந்ததிற்காக இவர் அடைந்த பலன் கள் மிக அதிகம். பாரிஸ் இந்திய திருவிழா வில் கலந்து கொள்ள ஏற்கனவே தேர்ந்து எடுக்கப்பட்ட கவிஞர் தரு மு. சிவராமுவை விலக்கி விட்டு, பிரெஞ்ச் அரசின் கலாச்சார அமைச்சக சிபாரிசு மூலம் சுந்தர ராமசாமியை அனுப்பி வைத்தவர் தான் இவர்.

ஆண்டு தோறும் கேரள ஆசான் நினைவு விருது, மலையாளம் தவிர்த்த மற்ற மொழி களில் உள்ள கவிஞர்களுக்கு வழங்கப்படுகிறது. சென்ற வருடம் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு வழங்க ஆசான் நினைவு விருது குழுவினர் முடிவு செய்தனர். க்ரியா ராமகிருஷ்ணன் அழையா விருந்தாளியாக அக் குழுவில் தன்னை புகுத்திக் கொண்டு, தனக்கு பல வகையில் உதவியாக இருக்கும் சி. மணியை தமிழின் சிறந்த கவிஞராக தேர்ந்து எடுத்து பரிசை வாங்கி கொடுத்தார். இது போன்ற தரகு வேலைகளை தவிர க்ரியா ஏனும் உருப்படியான காரியங்களை செய்து இருக் கிறதா என்பதும் தெரியவில்லை. ஆனால் இந்த தரகு வேலைகள் மூலம், அமெரிக்கா வில் உள்ள Library Cangress-இன், இந்திய புத்தகங்களைப் பற்றிய விரிவான Catalogue-செய்யும் பணியை பெற்று அதன் மூலம் ஆயி ரம் ஆயிரமாக சம்பாதிக்கும் ராம கிருஷ்ணன், கூத்து பட்டறையை Ford Foundation-க்கு அடமானம் வைத்ததில் பெறும் பங்கு ஆற்றி யுள்ளார். மார்க்சியம் பேசும் எஸ்.வி. ராஜ துறை, கூத்தின் காப்பாளராக தன்னை நினைத்துக் கொள்ளும் ந. முத்துசாமி, ஜி.வி. ஐயரின் கலை இயக்குநர் பி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இணைந்து நடத்தும் கூத்துப்பட்ட றைக்கு Chicf patorn ராமகிருஷ்ணன்தான். கிராமிய கலையான கூத்தை, ஒரு Classical கலையாக, ஒரு பிராமணக் கலையாக, மாற் றும் கீழ்த்தரமான வேலையை தான் கூத்து பட்டறை செய்கிறது.

கூத்து நடக்கும் விதம், அதன் அழகியல் தன்மை ஆகியவை முற்றிலும் பிராமண தன்மை யற்றவை. உதாரணமாக பாஞ்சாலியை கௌரவர்கள் சபையில் மானபங்கப் படுத்தும் காட்சிக்கு கூத்தில் ''பாஞ்சாலி துகில் உரித் தல்'' என்று பெயர். வடமொழி ஆதிக்கம் நிறைந்த கலா சேத்திரா முதலிய இடங்களில் இக்காட்சியை ''திரௌபதி வஸ்திராபரணம்'' என்று அழைப்பார்கள். அதே போல் வாலியை ராமன் கொலை செய்வதை கூத்தில் ''வாலி வதம்'' என்று அழைப்பார்கள். வட மொழியை சார்ந்து இருக்கும் நாட்டியங்களில் ''வாலி மோட்சம்'' என்று கூறுகிறார்கள். இவ்விரு நிலைப் பாடுகளும் ஒன்றுக் கொன்று எதிரனவை. மொழியியல் மற்றும் அழகியல் நிலைகள் கூத் தில் பொருளாதார அடிப்படையில் அமைந்த, பக்தி நிலைகளை கடந்த ஒன்று. இவ்வளவு உயர்ந்த நிலையில் உள்ள கூத்தை, கூத்து பட்டறைகாரர்கள் வடமொழி—ஆதிக்கத்தின் கீழ்கொண்டுவருவதில் வெற்றிபெற்றுவிட்டனர். கூத்து பட்டறை மூலம் நடைபெறும் கூத்தில் ''திரௌபதி வஸ்திராபரணம்'' ''வாலி மோட் சம்'' போன்ற பக்தி நிலைப்பாடுகளும், பிராமண அழகியல் தன்மைகளும் தான் விரவி இருக்கி றது. இந்த பிராமணமயமாக்கலினால், கூத்து, சாதாரண மக்களிடமிருந்து பறித்து எடுக்கப்படுகிறது.

இப்பொழுது க்ரியா ராம கிருஷ்ணனின் உதவியுடன் கூத்தை பிராமண கலையாக மாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். இது போன்ற மக்கள் விரோத செயல்களுக்கு எல் லாம் அமேரிக்கா ஆதரவு அளிக்கும். அதே போல் இதற்கும் 10 லட்சம் ரூபாயை உதவித் தொகையாக, கலையை வளப்பதாக கூறி(?) அமெரிக்காவில் உள்ள ''Ford Foundation'' அளித்து உள்ளது.

— ஜீவா

## புள்ளிகள்

கண்களின் வீச்சில்
ஒரு புள்ளியில்
சந்திக்கும் வேளை—

காதல் அரும்புகிறது,
அது கணங்கள் தோறும்
நிகழ்கிறது.

புள்ளிகள் மாறுகையில்
காதலும் மாறுகிறது.
காதலோ...
மறைவதில்லை.

எனது கண்கள்
வீச்சைப் பாய்ச்சுகின்றன.
புள்ளிகள் சந்திக்காத
நெடுந்தூரப் பயணம்.

முகத்தைச் சுருக்கி
நிராகரித்தும்,
கண்களால் எரித்து
காயமாக்கியும்,
நாவினால் சுட்டு
அவமானமாக்கியும்.
என்னை ஒரு புழுவென

மதியாமலும்...
புள்ளிகள் சென்றன.

பயணத்தின் தூரம்
அதிகம் போலும்!
புள்ளிகள் சுருங்கி
சூனிய மாகும்...
ஏகாந்த மெங்கும்
முகமறியாதவர்களுடன்
காதல் தொடர்கின்றது...

☐ கி.பி. அரவிந்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**நான் யாராயிருந்தாலென்ன? யுகங்களினூடே அலையும் அகதி, மனிதனின் வரலாற்றில் எது மறைக்கப்பட்டுள்ளதோ அதை உலகறியச் செய்யும் தொழிலை அவ்வப்போது செய்து வருவேன்; கண்களை பிறர் தோண்டப் பறிகொடுத்தவன்; கைகளின் நகக்கண்களில் ஊசிகள் ஏற்றப்பட்டவன்; உடலெங்கும் எலெக்ட்றிக் ஷாக் பெற்றவன்; ஆணுறுப்புகள் சிதைக்கப்பட்டும், பெண்ணுறுப்புகள் குதறப்பட்டும், டாங்குகள் மீதேற்றப்பட்டு மங்கி மங்கி வாழ்பவன் ''.**

□

நவீன உலகம் வெடிவைத்துத் தகர்க்கப்படுவதற்குள் ஒரு குழந்தை, இன்னும் ஒரு குழந்தை, கருக்கொண்டு விட்டது. கருவும், மின்னணுவின் வாழ்வுபோல ஒளிர்ந்து மங்கிப் போவதற்குள் மனித வரலாற்றை உணர்ந்து விடத் தலைப்பட்டது. ஆனால், ஓ, யாரிடம் கேட்பது ?

கரு கேட்டது :

''நான் பிறந்துவிட்டால் ?''

''இந்தியாவில் பிறந்து விட்டாலே புரட்சியைக் கைவிட்டுவிடுவாய். சக மனிதனை வெறும் ஜடக்கூலியாகக் கருதுவாய். நாடி வந்த மனிதக் கூட்டத்தை ஓட ஓட விரட்டிக் கொல்வாய் !''

''துணைக்கண்டத்தில், இந்துமகா சமுத்திரத்தின் பரப்பில்தானே எனக்குப் பிறப்பு என்று விதிக்கப்பட்டுள்ளது ?''

''ஆமாம், கருவே ! பஃறுளியாறும், பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடும், அதிலுள்ள கபாடபுரம் என்னும் உன் மூதாதையர்களின் நகரமும் கொண்ட கொடுங்கடல் இது. மனித வரலாற்றின் யுகக்கற்களுடன் கரைந்துவிட்ட பயங்கரப் பிரதேசம் இது. இங்கே தான் உன் பிறப்பறுபட வேண்டும் என்றால் நான் என்ன தான் செய்ய முடியும்?''

'' நீ யார், சொல்லவில்லையே ?''

''நான் யாராயிருந்தாலென்ன ? யுகங்களினூடே அலையும் அகதி. மனிதனின் வரலாற்றில் எது மறைக்கப்பட்டுள்ளதோ அதை உலகறியச் செய்யும் தொழிலை அவ்வப்போது செய்து வருபவன் ; கண்களை பிறர் தோண்டப் பறிகொடுத்தவன் ; கைகளின் நகக்கண்களில் ஊசிகள் ஏற்றப்பட்டவன் ; உடலெங்கும் எலெக்ட்றிக் ஷாக் பெற்றவன் ; ஆணுறுப்புகள் சிதைக்கப்பட்டும், பெண்ணுறுப்புகள் குதறப்பட்டும் டாங்குகள் மீதேற்றப்பட்டும் மங்கி மங்கி வாழ்பவன்''.

''சித்திரவதைகளா ? உங்களுக்குப் பயமில்லையா ?''

''இருந்தது. உடனே சமூக வாழ்வைவிட்டு விலகினேன். காடு மேடுகளில் கைத்துவக்குகளுடனும், கிரனேடுகளுடனும் அலைந்தேன் ; சமயத்தில் ஆயுதங்களைத் துறந்து, கலைந்த தலையுடனும், நீண்ட தாடியுடனும் நண்பர்களுக்கே பயந்து அலைந்தேன்; பனிபெய்யும் மலைகள் நிறைந்த ஊசியிலைக்காடுகளிடையே டிக்கெட் மற்றும் விசா இல்லாமல் இரவுகளிலே ரயில் பயணம் செய்தேன். சில இடங்களில் தோண்டுவதற்கு முன்னமே சாம்பலுடன் எலும்புக் கூடுகளும் கிடந்தன. எடுத்துச் சாப்பிட்டேன். சுவையாகவே இருந்தன.''

''வேறென்ன செய்தாய் ?''

''மீண்டும் அலையச் சோர்வுற்றுப் படித்தேன். லண்டன் மியுசியத்தில் முப்பது ஆண்டுகள்; ஜுரிக் நகரத்தில் 1910-ஆம் ஆண்டு கலைஞர்களுடன், நாவலாசிரியர்களுடன் உறவாடினேன்; நவீனக்கலைஞன் கருவுறுதலைக் கண்டேன்; சைபீரியக்காடுகளில், லேபர் முகாம்களில் உழைத்தேன்; உலகின் மறுபுறம் தாடி வைத்த சக கொரில்லாக்களுடன் சேர்ந்து போர் புரியச் சென்றேன்...''

''பிறகெதற்கு இங்கு வந்தாய் ?''

''புத்தகங்கள். ஒரு லட்சம் புத்தகங்களை ஒரு சேர எரித்த மனித எலும்புகளைப் பார்க்கத் தலைப்பட்டு வந்தேன். சொன்னால் நம்ப மாட்டாய். ஒரு லட்சம் புத்தகங்களை ஒரு சேர எரித்தவர்கள் காலத்தையே எரித்தவர்கள்; வரலாற்றைப் போட்டு மிதித்தவர்கள்''.

□

# ஒருலட்சம் புத்தகங்களும் இரண்டு நாளிதழ்களும்

*நாகார்ஜுனன்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''இதற்கு முன்பு யாருமே இப்படிச் செய்ய வில்லையா ?''

''செய்திருக்கிறார்கள். என் மூதாதையர்களும், உன் மூதாதையர்களும் மனித வாழ்வின், வரலாற்றின் இரகசியங்களை மூடி மறைப்பதாக நினைத்துக் கொண்டு இதைச் செய்துள்ளார்கள். 1938ல் வியன்னா நகரில் பல்லாயிரக் கணக்கான புத்தகங்கள் எரிக்கப்பட்டன. எரித்தவர்கள் எட்டே ஆண்டுகளில் உலகைக் கலக்கிவிட்டு வீழ்ந்தனர்''.

''அப்புறம்?''

''விமானிகள் குண்டு வீசும் போதும், கெலிகாப்டர்கள் தாழப்பறந்து ஊர் மக்களைச் சின்னா பின்னப் படுத்தியபோதும் சிவப்பு அட்டை போட்ட புத்தகங்கள் இருபதாண்டுகளுக்கு முன்பு சிதறி வீழ்ந்தன. அங்கு ஒவ்வொரு வீடும் ஒரு நூலகம்தான். வரலாறே மனிதச் செயல்தான். அங்கும் குண்டு வீசியவர்கள் எரிந்த சாம்பலின் வெம்மையைக் கூடப் பொறுக்க முடியாமல் ஓடினார்கள், தெரியுமா?''

''தெரியாது. ஒருலட்சம் புத்தகங்களின் சாம்பல் என்னவாயிற்று ?''

''கண்டந்தோறும் சிதறிக்கிடக்கும் கருஞ் செந்நிற மனிதர்களிடம் ஒட்டிக் கொண்டிருக்கிறது. ஒட்டிக் கொணடிருப்பதைத் தட்டிவிடாமல் அவர்கள் வாழும் ஒவ்வொரு கணமும் சாம்பலின் வெம்மை தக்கவைக்கப் பட்டுள்ளது''.

''அப்படியா?''

''ஆம். ஆனாலும் சாம்பல் இந்துமகா சமுத்திரத்தின் பரப்பில், கரையிலிருந்து கரை மாற்றி ஓடும் பச்சை நிற கெலிகாப்டர்களில் ஏற்றப்பட்டுச் சிதறடிக்கப்படுவது எங்களுக்குத் தெரியாததல்ல. கரைசேர முடியாமல் நீந்திக் களைத்து குண்டுகளுக்கும் பலியான இளைஞர்கள் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள் - தாங்களும் சாம்பலையும், மனித எலும்பையும் ருசி பார்த்ததாக...''

''எல்லோரும் ருசி பார்த்துள்ளார்களா?''

''ஆம். செம்மண் சகதியில் சிலசமயங்களில் பச்சை சைத்தான்களால் தூக்கியெறியப்பட்டு மரத்தில் தொங்கவிட்ட உணவுப் பொட்டலங்களையும் நான் கண்டிருக்கிறேன். பன்னாடுகளின் சிறைகளில் விதவிதமான மொழிகளிலுள்ள கெட்டவார்த்தைகளுக்கு நடுவே சுவரில் தீட்டியுள்ள மனித விந்துவின் நிறத்தையும் நான் ஊன்றிப் பார்க்கிறேன்.''

''எல்லாமே சாம்பல் நிறம்தானா?''

''ஆம்''.

''புரட்சி என்பது செந்நிறம்தான் என்று என்னிடம் சிலர் கூறியிருந்தார்களே?''

''பழைய கூற்றை நம்பாதே''.

''புத்தகச் சாம்பலுக்கு இவ்வளவு சக்தியுண்டா ?''

''கருவே! புத்தகங்களை நீ கண்டதில்லை. வார்த்தைகளில் நீ கண் நிறுத்தியதில்லை, ஏன் உன் உடற்சாம்பலையே நீ இன்னும் உணர்ந்ததில்லை...''

''ஆம்! ஆனால் உணரத் துடிக்கிறேன்''.

''வரிகள், எழுத்துக்கள் வெறும் அர்த்தமல்ல. அவற்றின் பொருளல்ல. அவை வரலாறு எனும் சாம்பலின் மெய்ப்பொருள் நண்பனே !...

''பொறு, எனக்கு வெளியே வந்து உலகைப் பார்க்க் வேண்டும்போல் இருக்கிறது. நானே பார்த்துத் தெரிந்து கொள்கிறேன்''.

''பொறுக்க வேண்டியது நீதான் ! உலகம் உன்னதச் சாம்பலால் மட்டும் ஆனதல்ல, இதில் நீ பிறந்துவிட்டால் உன்னதங்களுக்காக வாழாமல் அற்ப லட்சியங்களுக்காக வாழ்ந்தே சாவது உறுதி. எனவே இப்போது பிறக்காமலிரு. இதுவே நீ செய்யும் ஒரே புரட்சி. பிறந்து விட்டாலோ சமரசவாதியாகி விடுவாய் !''

□ □ □

ஒரு லட்சம் தமிழ்ப் புத்தகங்கள் எரிந்து மறைந்த ஆறே ஆண்டுகளில் வரலாறு மீண்டும் எழுதப்படும் நாட்கள் யாரும் கேட்காமலேயே வந்தன. பொறுத்திருந்த கரு புரட்சியாளனாயன்றி சமரசவாதியாய் வெளிவந்தது. ஆனால் யுகங்களினூடே அலையும் அகதியைக் காணோம். வேறொரு சாம்பல்படர்ந்த சமுத்திரப் பரப்புக்குப் போய்விட்டான் போலும்.

கரு வெளிவந்த காலை, நவீன உலகம் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டது. தகர்க்கப்பட்டவற்றில் இரண்டு நாளேடு அலுவலகங்களும், அச்சு இயந்திரங்களும் அடங்கும். பற்றி எரிந்த நியுஸ்பிரிண்ட் சாம்பலாயிற்று. தொடர்ந்து எழுந்த குண்டுகளின் ஓசையை மறந்துவிட்டு கொலையாளர்கள், ஆசுவாசத்துடன் பத்திரிகைகளின் பத்திகளை கரண்டிகளையிட்டு நிரப்பிக் கொண்டிருந்தார்கள். பொய்களின் ஓசை துவங்கியது.

குண்டுகளின் ஓசையும் அடங்கவேயில்லை.

சாம்பல் இந்துமகா சமுத்திரப் பரப்பில் படர்ந்தது. சிதறி ஓடிய ஒவ்வொரு மனிதனும் யுகங்களினூடே அலையும் அகதியானான். □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- ஈழத்தில் போர் நிறுத்தம் அவசியம்.
- தமிழர் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்
- சம்பந்தப்பட்டோர் பேச்சு வார்த்தைக்கு வருக.

# இலங்கை நிலவரம் பற்றி இரத்தின சபாபதி

பத்திரிகைகள் வரலாற்றில் ஊரும் உலகமும் என்ற விளக்க ஆய்வு இன்றியமையாதது என்பதை யாவரும் அறிவார். ஊரை அணுகும் பொழுது உலகையும் அணுக வேண்டும் என்பதும், உலகை அணுகும் போது ஊரையும் ஸ்திரணப் படுத்த வேண்டும் என்பதும் அரசியல் நியதி. இந்த வகையில் ஈழம் பற்றி எண்ணுகையில் உலகம் பற்றியும் முக்கியமாக இந்தியா பற்றியும் கவனத்திற் கொள்ள வேண்டியது முக்கியமாகிறது. சரித்திரம் அறிந்த காலம் தொட்டு, இலங்கை அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா கூறியது போல், இந்தியா 17 தடவைகளாக இலங்கையில் தலையிட்டிருக்கிறது. இவற்றில் சோழத் தலையீடு போல், விஜயன் தலையீடு மேற்கோளாக காட்டப்படினும் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தமே சுதந்திர இலங்கையில் இந்தியாவின் தலையீட்டிற்கு முதல் முறையானது. இதைத் தொடர்ந்து அண்மையில் ஈழப் போராட்டத்தைக் கட்டுப்படுத்தும் வண்ணம் இலங்கை அரசு ஈழப் போராளிகளுக்கு எதிராகத் தொடுத்த போரினால் ஏற்பட்ட வன்முறையாலும், அழிவுகளாலும் ஏற்பட்ட அல்லோல கல்லோலத்தை சமாளிப்பதற்காக இந்திய அரசு, தனது பாதுகாப்பு படையினரை இலங்கைக்கு அனுப்பியது. இலங்கைக்கு அனுப்பப்பட்ட பாதுகாப்பு படையினர் இலங்கைப் போராளிகளுடன் சுமூகமான நல்லுறவை வளர்ப்பதற்கு பதிலாக, அவர்களுடன் மோத வேண்டிய நிலை ஏற்பட்டது. இதிலும் முக்கியமாக ஈழ விடுதலைப் போராளிகளில் ஒரு பிரிவினரான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடியாக மோத வேண்டிய நிலை ஏற்பட்டது. இது துர்பாக்கிய வசமானாலும், இலங்கை-இந்திய பாதுகாப்பு படையினரின் அத்துமீறிய செயற்பாடுகள் இன்று ஊரையும், உலகத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது. பாதுகாப்புப் படையினர் ஆரம்ப காலத்தில் ஓரிரு விஷயங்களில் பாராமுகமாக இருந்திருக்கக்கூடாது. அதாவது விடுதலைப் புலிகளின், பன்னிருவர் இலங்கை அரசினால் யாழ்ப்பாண வலயத்திற்குட்பட்ட கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு, கொழும்புக்கு அழைத்துச்செல்ல முற்படுகையில் அவர்கள் தங்கள் விடுதலை போர்ப்பணியை முடிக்கும் வண்ணம் சயனைட் மருந்து அருந்தி உயிர்களை மாய்த்துக் கொண்டதை இந்திய பாதுகாப்புப் படையோ அல்லது இந்திய இலங்கை உறவில் நல்லெண்ணம் கொண்டோரோ தடுத்திருக்கலாம். இதே போலவே திலீபனின் சத்தியாக்கிரக உண்ணாவிரதத்தைத் தடுத்து அவரின் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம். இந்த தாக்கங்களே விடுதலைப்புலிகளை இந்தியப் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளச் செய்தன. இதற்காக இந்தியப் படையினர் விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்தும் நோக்குடன் செயற்பட்டமை அப்பாவி மக்களை கொன்று குவித்த சம்பவங்களுக்கு இட்டுச் சென்றது என்பதற்கான பல சான்றுகளுள் ஒன்று சாவகச் சேரி சம்பவம். இதே போல் தான் மானிப்பாய், நாவற்குழி போன்ற இடங்களில் இந்தியப் படையினர் அத்துமீறி விடுதலைப்புலிகளின் மீது மேற் கொண்ட தாக்குதல்களை எதிர்த்து ஈழத்திலிருந்து பலத்த எதிர்ப்புக் குரல்கள் எழுப்பப்பட்டது மட்டுமின்றி, இந்தியாவிலிருந்தும் எதிர்ப்புக் குரல்கள் எழுப்பட்டதுடன் இந்தியப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாளர் விவாதமே நடத்தினர். இந்த விவாதத்தின் போது எதிர்க்கட்சியினர் இந்திய பாதுகாப்பு படையினரின் அத்து மீறல்களை சுட்டிக்காட்டியதோடு, விடுதலைப் புலிகளின் போராட்டக்குணாம்சத்தையும் விடுதலைப் பாங்கையும் பாராட்டி உள்ளனர். இதனால் அவர்கள் உடனடி போர் நிறுத்தம் அவசியம் என வாதாடினார்கள். இந்தவாதாட்டத்தின் போது உரையாற்றிய பிரதமர் ராஜீவ் காந்தி, ''விடுதலைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புலிகள் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு தங்களது படைக் கருவிகளை பாதுகாப்புப் படையினரிடம் சரண் செய்தால் போர் நிறுத்தம் அனுஷ்டிக்கலாம்" என்ற தோரணையிலும், "விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைக்கு இந்திய அரசின் கதவுகள் திறந்தே இருக்கின்றன" என்றும் கூறியுள்ளார். அத்தோடு இந்திய வெளி விவகார பாதுகாப்பு மந்திரியான திரு நட்வர் சிங்கும் இதே தொனியில் பேசியுள்ளார்.

இவர் பேசும் நாட்களில் இலங்கையில் மற்றுமோர் சம்பவம் நடைபெற்றது. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைத் தமிழர் விடிவிற்கான இலங்கை அரசாங்கத்தின் தீர்வாக மாகாண சபை திட்ட நகலும், அத்தகைய மாகாண சபை அமுலாக்குவதற்காக அரசியல் திருத்தச் சட்டமும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதையொட்டிய விவாதம் நடைபெறும் போதே கொழும்பில் ஒரு பிரமாண்டமான வெடிகுண்டுத் தாக்குதல் ஏற்பட்டது. அத்தோடு மேலும் ஒரு தாக்குதல் கண்டியிலும் நிகழ்வுற்றது. இதை மாகாண சபை மசோதாவின் எதிர்த் தரப்புவாதிகளுள் ஒரு பிரிவான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.)யினரே நடத்தியதாக அரசுதரப்பினர் அறிவிக்கின்றனர். இதற்கு மகுடம் சூட்டுவதைப் போல் மாகாண அபிவிருத்தி மசோதாவை எதிர்த்து விவசாய இலாகா மந்திரி காமினி ஜெயசூரியா தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இதனால் அரச விரோதிகளால் நாட்டில் ஒரு அல்லோல கல்லோலமான சூழ்நிலை எழுந்து விடுமோ என்ற ஐயப்பாடு தோன்றியுள்ளது. இதனால் ஜனாதிபதி ஜயவர்த்தனா எப்படி தன்னுடைய இயலாமையை சமாளிக்க ராஜதந்திர ரீதியாக இந்தியப்படையினரை இலங்கையின் வடபகுதிக்கு அழைத்தாரோ, அதே போல் அதே படையினரை தென் பகுதி சூழ்நிலையை சமாளிப்பதற்கு அதிபர் ஜெயவர்த்தனா அழைத்து விடுவாரோ என்ற ஐயம் எழுகிறது. இதனால் ஒரு நாடு தழுவிய இந்தியத் தலையீடு இடம் பெற்றுவிடுமோ என்ற கேள்விக்குறி எழுந்த வண்ணமே இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் இந்தியப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் முடிவில் மந்திரி நட்வர் சிங் ஆற்றிய ஒரு உரை கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது. அதாவது "இலங்கையில் நடக்கக்கூடிய பிரளயங்களினால் அங்கு வல்லரசுகளின் தலையீடு ஏற்படாது பார்த்துக் கொள்ள வேண்டும்" எனக் குறிப்பிட்டார். இதனால் இந்து மா சமுத்திரத்தில் பாரசீக வளைகுடாவில் நடப்பது போல் மற்றுமோர் பிராந்தியப் போர்—அபாயம் உண்டு என்பதையே அவர் பேச்சு தொனிக்கச் செய்கிறது. இந்தச் சூழ்நிலையில் இலங்கையிலும் முக்கியமாக ஈழத் தமிழர்களின் பால் நல்லெண்ணம் கொண்டோர் அணுக வேண்டிய முறையை ஈரோஸ் தெட்டத் தெளிவாக தெரிவித்துள்ளது. அதாவது இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதன்மூலம், இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் மசோதாக்களை நிறைவேற்ற ஆவன செய்தல் வேண்டும். ஏனெனில் மசோதா பிராந்திய சட்டத்தை வலியுறுத்தும் போது வட கிழக்கு இணைப்புக்கு வழி கோலவில்லை. அத்தோடு இதை நிர்ணயிப்பதற்கு ஒரு சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பதும் தவிர்க்கப்பட வேண்டிய தொன்று. அத்தோடு இலங்கை-இந்திய ஒப்பந்தம் இலங்கை வாழ் தமிழர்களின் ஒரு சாரரான மலையகமக்களை ஒதுக்கி வைத்ததோடு அவர்களில் 2 லட்சம் பேரை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பும்படி கட்டாயப்படுத்துகிறது. இவற்றை பரிசீலனை செய்து நல்லதோர் முடிவுக்கு வர இதில் சம்பந்தப்பட்டோரை பேச்சு வார்த்தைக்கு கொண்டு வரக் கூடியதாக செய்யவேண்டும். இதற்கு முதற்படியாக போர் நிறுத்தம் அவசியம். அத்தோடு பேச்சு வார்த்தையும் அவசியம். 4 அம்சத் திட்டத்தை ஈழப் போராளிகள் ஒரு முகமாக சமர்ப்பிக்க திம்பு மகாநாட்டை கூட்டிய சக்தி (Binding force) மீண்டும் சம்பந்தப்பட்டோரை கூட்டி இலங்கையில் உள்ள அல்லோல கல்லோலத்தை தீர்ப்பதுடன், பிராந்திய போர் மூளாவண்ணம் தடுக்கவும் வேண்டும்.

எது எப்படியாயினும் இன்று இலங்கையில் உருவாகியுள்ள கட்டுக்கடங்காத சூழ்நிலையினால் ஒரு உள்நாட்டுக் கலவரம் உருவாகும் என்ற ஐயமும் தலைதூக்கிய வண்ணம் இருக்கிறது. இதனால் இந்தியப் படை நாடுதழுவிய ரீதியில் (unilateral intervention) தலையிட வேண்டிய நிர்பந்தச் சூழ்நிலையில் உள்ளது. இப்படி ஒரு நிலை உருவாகின் இலங்கை வாழ் தமிழருடைய இறைமையைக் காப்பாற்றக் கூடிய அரசியல் நிர்ணய வலய எல்லையை (Political Demarkation) நிர்ணயிக்க ஒரு மும்முனை (தமிழர்-இலங்கை-இந்திய Tripatriate) மாநாடு அவசியம். இதை வல்லரசுகளின் தலையீடின்றி தடுப்பதற்கு ஒன்றிணைக்கும் சக்தி (Binding force) ஆக்கப் பூர்வமான செயற்திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பூக்களாய் வர்ணிக்கப்பட்டோம் போராட்ட நெருப்பாய் மாறினோம்

□ அனுஷியா □

ஈழப் பிரதேசத்தை வடக்கு, கிழக்கு, மலையகம் என பிரதேச வாரியாக 3 பிரிவுகளாக பிரிக்கலாம். மலையகத்தில் இலங்கைக்கு அதிக வெளிநாட்டு வருமானத்தை ஈட்டித் தரும் தேயிலைத் தோட்டங்களில் ஏறத்தாழ 9½ லட்சம் தமிழ் பேசும் தொழிலாளர்கள் தமது உழைப்பை நல்குகிறார்கள். இங்கு வறுமை காரணமாக ஆண்கள், பெண்கள், சிறு வயதினர் என்ற பேதமின்றி ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வேலைக்குச் செல்கிறார்கள். இங்கு இனரீதியாகவும், வர்க்கரீதியாகவும் ஏற்படுத்தப்படும் பாதிப்புகளில் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். பெருந்தோட்டங்களில் உழைக்கும் நேரம் பெண்களுக்கு ஆண்களைவிட அதிகமாகவும், சம்பளமோ குறைவாகவும் காணப்படுகிறது. அத்துடன் வீட்டு வேலைகளையும் கவனித்தல் என்ற இரட்டைச் சுமை அவர்கள் மேல் சுமத்தப்படுகின்றது. ஆயினும் வீட்டை விட்டு வெளியே வந்து சமூக உழைப்பில் பங்கெடுத்துக் கொள்வதாலும், சொத்துக்கள் அற்ற ஒரு சமூகமாக இந்தத் தொழிலாள வர்க்கம் காணப்படுவதாலும் இந்த அடிப்படையிலான அடக்கு முறைக்கு பெண்கள் ஆளாவது குறைவு என்றே சொல்ல வேண்டும்.

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் இங்கு பெருமளவு மக்கள் ஏழை விவசாயிகளாகவும், மீனவர்களாகவும், தொழிலாளர்களாகவும் காணப்படுகிறார்கள். கூலி விவசாயிகள், ஏழைத் தொழிலாளர்கள் மட்டத்திலே பெண்களும் தொழிலுக்கு செல்கின்ற நிலையும், பெண்களுக்கான கட்டுப்பாடுகள் இறுக்கம் குறைந்தும் உள்ளன. ஆனால் வறுமையும், அதன் காரணமான கல்வியின்மையும் பெண்களையே அதிகம் பாதிக்கின்றன. மலையகத்தில் உள்ளது போல பெண் தொழிலாளருக்கான குறைந்த கூலி, வேலைகளின் இரட்டைச்சுமை போன்ற பொதுவான பிரச்சனைகள் இங்கு உள்ளன. நடுத்தர வர்க்க விவசாயிகள் மட்டத்தில் அல்லது நடுத்தர வர்க்கத்தினரிடையே நகர்ப்புறங்களிலும், அண்டிய பகுதிகளிலும் பெண்களும் கல்வி கற்பதையும், ஓரளவு தொழிற்துறைகளில் பணிபுரிவதையும் காணலாம். அதே வேளை இந்த வர்க்கத்தினரிடையே இன்னுமொரு போக்காக கிராமப் புறங்களில் கலாச்சாரம், பண்பாடு என்ற ரீதியில் பெற்றோரினால் பெண்பிள்ளைகளுக்கு உயர்கல்வி, உத்தியோகம் பார்த்தல் என்பன மறுக்கப்படுவதும், திருமணமான பின்பும் வீட்டு நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்வதிலேயே காலம் கழிவதும் பொதுவான நிலைமையாகும். பெண்களை வேலைக்கு அனுப்புவது தமக்கு கௌரவக் குறைவு என்று அவர்களை தமது உடமைகளாக கருதிப் பார்க்கும் ஆண்களின் மனப்பான்மை, பொதுவான போக்காக வெளிப்படுகின்றது சீதனம் கொடுக்கும் பழக்கம் இங்கு காணப்பட்டாலும் அது சமூகத்தில் பெரும் பிரச்சனையாக இல்லை. சாதியமைப்பு என்பது இங்கு இறுக்கமற்றதாகவும், சாதி ரீதியான அடக்கு முறைகள் குறைவாகவும் உள்ளன. மத ரீதியாக இந்துக்களும், கிறிஸ்தவர்களும் பெருமளவினராக இருந்தாலும், குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் இஸ்லாமிய மதத்தை சார்ந்த மக்கள் செறிவாக வாழ்கிறார்கள். இவர்களிடையே முக்காடு போடுதல் முதல் பல்வேறு வகையான கட்டுப்பாடுகள் பெண்களுக்கு விதிக்கப்பட்டுள்ளன. ஒரு தலைப்பட்சமாக கற்பு, ஒழுக்கம் என்பன பெண்களுக்கு வற்புறுத்தப்படும் அதே வேளை, ஆண்களிடத்தில் அவை எதிர்ப்பார்க்கப்படுவதில்லை. இந்த விதமான போக்கு ஏனையோரிடத்தும் காணப்பட்டாலும் மீறப்படும் நிகழ்வுகளும் உண்டு.

வட மாகாணத்தை எடுத்துக் கொண்டால் முக்கியமாக குடாநாட்டுப் பிரதேசத்தினுள் தமிழ் பேசும் மக்களின் மத்தியதர வர்க்கத்தினரில் 80%மானோர் இங்கு செறிந்துள்ளனர். பெருமளவு மக்கள் இந்துக்களாகவும், சாதி அமைப்பு மிக இறுக்கமாக பேணப்படும் பிரதேசமாகவும் இது விளங்குகிறது. கல்வி கற்று உத்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யோக வாய்ப்பு பெறுதலே இங்கு பொருளாதாரத்திற்கான முக்கிய வழிமுறையாக உள்ளது. இங்கு ஏழைத் தொழிலாளர்கள், மீனவர்கள் கூலி விவசாயிகளில் பெருமளவினோர் சாதி ரீதியாக தாழ்த்தப்பட்டு, பொருளாதார ரீதியாக பின் தங்கியவர்களாக வறுமையில் வாழ்கிறார்கள். இவர்கள் மட்டத்தில் கல்வி என்பது பெண்களுக்கு ஓரளவு அனுமதிக்கப் படுகின்ற போதும், வறுமை காரணமாக கல்வியை மேலும் தொடர்வது தடுக்கப்படுகிறது. சீதனப் பிரச்சனை இங்கு அழுத்தம் பெற்றதாக இல்லை.

ஆனால் மத்திய தர வர்க்கத்தினர் மட்டத்தில் பெருமளவு பெண்கள் கல்வி கற்பதும், குறிப்பிடத்தக்கோர் அரச நிர்வாகத்திலும், தனியார் நிறுவனங்களிலும் வேலை பார்ப்பதும் அனுமதிக்கப்படுகிறது. அதே வேளை இவர்களிடையே கலாச்சாரம், பண்பாடு என்ற போர்வையில் மதம், சாதி, கல்வித்தரம், அந்தஸ்து என்ற அடிப்படையில் பெண்களுக்கு பெற்றோர்களால் வாழக்கைத் துணை தேடப்படுவதால் கல்யாணச் சந்தையிலே அதிக விலை கொடுத்தே அந்தத் துணையை வாங்க வேண்டியுள்ளது. சீதனப் பிரச்சனை காரணமாக 35 வயது வரையும் திருமணமாகாமல் இருக்கும் பெண்களையும், தங்கைமார்களை 'கரை சேர்ப்பதற்' காக முதுமை வரை 'பிரமச்சாரி' என்ற பட்டத்துடன் வாழும் அண்ணன்மார்களையும் கூட காணமுடிகிறது.

### ஈழப் போராட்டத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள்

மலையகப் பிரதேசத்தில் ஏற்கனவே குறிப்பிட்டது போல் தொழிற்சங்கங்களில் அங்கத்தவர்களாக உள்ள சகல பெண் தொழிலாளர்களும் சாதாரணமாக வேலை நிறுத்தம் போன்ற ஜனநாயக ரீதியான போராட்டங்களில் பங்கெடுத்து பழகக்கப்பட்டவர்கள். மாறாக தமக்கெதிராக இனரீதியாக அல்லது வேறெந்த வகையிலோ வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படும் போது ஆண்கள் பெண்கள் என்ற பேதமின்றி கைகளில் அகப்படும் கற்கள், தடிகள், கத்திகள் என்பனவற்றையே ஆயுதங்களாக பயன்படுத்தி அம்மக்கள் போராடத் தவறியதில்லை. இந்த வகையில் இழப்பதற்கு உயிரைத் தவிர எதுவுமில்லை என்ற நிலையில் பாட்டாளி வர்க்கத்திற்கேயுரிய மூர்க்கமான போராட்டக் குணாம்சத்தை அப்பெண்களிடத்தில் காணமுடிகிறது.

கிழக்கு மாகாணத்தை பொறுத்த அளவில் ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் மத்தியில் விடுதலைப் போராளிகளுக்கு ஆதரவாக முழுக் குடும்பத்தையுமே இலகுவில் மாற்ற முடிந்தது. இந்நிலையில் வீடு என்ற வட்டத்தினுள் இயக்கத்தினருக்கு ஆதரவு வழங்குவதில் அன்னையர்களினதும், சகோதரிகளினதும் பங்கு அதிகமாகும். இந்நிலையையும் கடந்து இராணுவ ரீதியில் குடும்பத்திற்கு பிரச்சனை ஏற்படும் காலகட்டத்தில் பெற்றோரின் குறிப்பாக தாய், சகோதரர்களின் ஆதரவுடன் பெண்கள் வெளியேறி போராட்ட அமைப்புகளில் இணைந்து முழுநேரமாக செயற்பட்டனர். இவ்வாறாக புரிந்துணர்வு அடிப்படையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தமது குடும்பத்தினரை தமக்காதரவாக மாற்றியமைத்தல் 'வீட்டை வெல்லுதல்' அல்லது 'வீட்டை உடைத்தல்' என நாம் குறிப்பிடுவோம். மாறாக குடும்பத்தினர் விரும்பாத நிலையில் இயக்கத்திற்கு வந்து செயற்படும் நிலையும் சில வேளைகளில் தவிர்க்க முடியாததாகிறது.

வடக்கே குடா நாட்டிற்கு வெளியேயும், குடா நாட்டினுள் கிராமங்களில் ஏழை விவசாயிகள், தாழ்த்தப்பட்டோர் மட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் காணப்பட்டது போன்ற நிலை காணப்படுகிறது. மாறாக மத்திய தர வர்க்க மட்டத்தில் பெண்கள் பெற்றோரின் அங்கீகாரத்துடன் இயக்கத்தில் முழு நேரமாக பங்களித்தல் என்பது மிக மிக அரிதாகவே உள்ளது. எனவே இப்பகுதியில் பெற்றோர் அனுமதியின்றி வெளியே வந்து பணியாற்றும் இளம் பெண்களே அதிகமாக உள்ளனர். அதிலும் குறிப்பாக கடந்த மே மாதம் (1987) வடமராட்சியை இராணுவம் கைப்பற்றிய ஒரு கிழமையுத்தத்தின் போது பாலியல் பலாத்காரங்கள் அதிகம் இடம்பெற்றன. அதை விடவும் அதிகமாக அது பற்றிய செய்திகளும், வதந்திகளும் குடா நாடு பூராவும் பரவின. இராணுவம் வடமராட்சியிலிருந்து ஏனைய பகுதிகளுக்கும் நகரும் என்ற அச்சம் ஏற்பட்ட போது மேல்மட்டத்து குடும்பங்களைச் சேர்ந்த இளம் பெண்கள் பாடசாலைகளில் தமது படிப்பை இடை நிறுத்தி விட்டு, பெருமளவில் இயக்கங்களில் இணைய முன்வந்ததை அவதானிக்க முடிந்தது.

பிரதேச ரீதியான இந்த நிலைமைகளுக்கப்பால் பொதுவாக இந்த போராட்ட சூழல் பெண்கள் மத்தியில் எத்தகைய மாற்றத்தை தோற்றுவித்தது என இனி பார்ப்போம். தங்கள் புதல்வர்களை போராட்ட களத்தில் இழந்துவிட்ட அல்லது இன்னும் இழந்து விடாதிருக்கின்ற அன்னையர்கள் மத்தியில் ஏனைய போராளிகளையும் தமது புதல்வர்களைப் போன்று வரவேற்று அவர்களுக்காக தம்மாலியன்ற உதவிகளை செய்கின்ற மனப்பான்மை வளர்ந்தது. அது மட்டுமன்றி 1984ம் ஆண்டு இராணுவம் தேடுதல் வேட்டை

www.tamilarangam.net



யின் போது வடமராட்சி பகுதியில் 500 இளைஞர்களை கைது செய்தனர். அப்போது தன்னியல்பாகவே அன்னையர்கள் திரண்டெழுந்ததையும், ஊர்வலமாகச் சென்று யாழ் அரசாங்க அதிபரிடம் தமது புதல்வர்களை விடுவிக்குமாறு கோரியதையும் காணமுடிந்தது.

விடுதலை அமைப்புகளில் இணைந்து கொண்ட இளம் பெண்களிடையே அவர்கள் மிக மிகச் சிறு தொகையினராக இருந்த போதிலும் சமுதாய மாற்றத்திற்கான தேவை பற்றிய விழிப்புணர்வும், பெண்ணடிமைத்தனமானது இந்த முதலாளித்துவ சமுதாய அமைப்பிலும், குடும்ப அமைப்பிலும் எவ்வாறு பேணப்படுகிறது என்பது பற்றியதான விஞ்ஞான ரீதியான பார்வை அவர்களிடத்தில் காணப்படுகிறது. இந்த அடிப்படையிலன்றி குடும்பத்திலும் சமூகத்திலும் தமக்கு ஏற்பட்ட பல்வேறு பாதிப்புகளினால் போராட்ட அமைப்புகளில் வந்து இணைந்து கொண்டவர்கள் அனேகர் முற்கூறிய தரப்பினரால் வழி நடத்தப்பட வேண்டிய நிலையிலுள்ளவர்களாவர்.

பிரதேச ரீதியாகவும், கிராம அமைப்பு, மதம், சாதி, குடும்பம் என்று தம்மைச் சுற்றியிருந்த பல்வேறு வலைப் பின்னல்களையும் அறுத்து விடுதலை அமைப்புகளில் முழு நேரமாக இணைந்து கொண்ட பெண்களிடத்தில் தமது சொந்தக் கால்களில் நிற்பதற்கான உறுதியை அனுபவங்கள் ஏற்படுத்தியிருந்தன. அவற்றை உடைத்து முன்னேறுவதென்பது இத்தகைய போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்வதன் மூலமாகவே சாத்தியமாகும் என்பது உணரப்பட்டது.

பாரம்பரியமாக தமிழ்ப் பெண்கள் என்றால் 'இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்ட பிற்போக்குத்தனமான வரையறைகளை அவர்கள் உடைத்தெறிந்தார்கள். பெண்களது வாழ்வின் அதி உன்னத நிலையே திருமணம் என்ற கருத்துருவும், கணவனுக்கும், குடும்பத்திற்கும் சேவை செய்வதே அவளது கடமை என்ற கருத்துருவும் மாற்றியமைக்கப்பட்டன. சமுதாய மாற்றம் அல்லது இன விடுதலை என்பதே போராட்ட அமைப்புகளில் தம்மை இணைத்துக் கொண்ட இரு பாலாருக்கும் பொதுவான இலட்சியம் ஆனது. திருமணம் என்பதும், அதுகுறித்தான உறவுமுறைகளும் மட்டுமே வாழ்க்கையின் சாராம்சம் என்பதல்ல, அவை வாழ்க்கையின் ஒரு பகுதி மட்டுமே என்பது உணரப்பட்டது. முழு நேரமாக இயங்கிய பெண்கள் இயக்க பாசறைகளில் (cells) ஒன்றாக இருந்து செயற்திட்டங்களில் ஏனைய போராளிகளுடன் இணைந்து செயற்பட்டபோது நடைமுறையில் பெற்றுக் கொண்ட அனுபவங்கள், அவர்களது குறுகிய மனப்பான்மைகளை அகற்றிக் கொள்ள உதவின. இவையனைத்தும் போராட்ட அணிகளில் தம்மை இணைத்துக் கொண்ட மிகச் சிறு தொகையினரான இளம் பெண்கள் மத்தியில் ஏற்பட்ட மாற்றங்களே.

பெருமளவிலான பெண்கள் இன்னும் தமது நிலைமை பற்றியோ சமூகம் பற்றியோ விழிப்புணர்வு பெறாமல் இருப்பது ஒரு யதார்த்த நிலையாகும். விழிப்புணர்வு பெற்ற அன்னையர்களும், பெண்களும் எந்த அளவுக்கு ஒழுங்கு படுத்தப்பட்டு அணிகளாக்கப்பட்டனர், என்றால் அது கேள்விக்குறியே. அன்னையர் முன்னணி என்ற அமைப்பு குறிப்பாக வடக்கே மட்டும் சில காலம் செயற்பட்டதை காண முடிந்தது. முக்கியமாக மலையகம் வாழ் பெண் தொழிலாளர்கள் எந்த அளவிற்கு அணுகப்பட்டார்கள் என்ற கேள்வி எழுப்பும்போது கேள்விக் குறியே அதிலும் மிஞ்சுகிறது. எனவே பெண்கள் மத்தியில் விழிப்புணர்வையும், மாற்றத்தையும் ஏற்படுத்த செய்யப்பட வேண்டிய பணிகள் இன்னும் அதிகமாகவே காணப்படுகின்றன.

இதே வேளையில் இப்போராட்ட அனுபவங்களினூடாக பெறப்பட்ட எதிர் வினைவுகளை நோக்க மறுப்பது நேர்மையீனமாகும். ஈழவிடுதலைப் போராட்டத்திலே பல்வேறு விடுதலை அமைப்புகள், தாம் சார்ந்த வர்க்க குணாம்சங்களை பிரதிபலித்து வளர்ந்திருந்தன. எனவே அத்தகைய அமைப்புகளின் தூர நோக்கற்ற செயற்பாடுகளால் போராட்ட அமைப்பினுள்ளே இரு பாலாரிடையே சில எல்லை மீறிப்போன உறவு முறைகள் ஏற்படுத்திய நிகழ்வுகளை தவிர்க்க முடியாது போயிற்று. அங்கீகரிக்கப்பட்டிருக்கக் கூடிய உறவு முறைகள் கூட சில அமைப்புகளில் தடை விதிக்கப்பட்டு அவற்றிற்கான தண்டனையை பெண் போராளிகளே அனுபவிக்க நேர்ந்ததான கசப்பான அனுபவங்கள் நமக்கு பாடங்களாக அமைந்தன.

இன்னுமொரு விடயம். சமுதாயத்தில் நிலவிய ஆணாதிக்க போக்கின் எச்ச சொச்சங்களும், சமூகத்தின் கலாச்சார ரீதியான பல்வேறு பிரதிபலிப்புகளும், விளைவுகளும் போராட்ட அமைப்புகளுக்குள்ளும் அவை எவ்வளவு முற்போக்கானவையாக இருந்த போதிலும் கூட - பிரதிபலிக்கப்படுவது தவிர்க்க முடியாதது. உண்மையில் சமுதாய மாற்றம் அல்லது ஈழ விடுதலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பற்றியதான விழிப்புணர்வு பெண்கள் மட்டத்தில் பரவலாக காலம் தாழ்த்தியே ஏற்பட்டது. 83ம் ஆண்டின் பின்னரே இந்த நிகழ்வு ஆரம்பமானது. இருந்தும் போராட்ட அமைப்புகளில் தீர்மானம் எடுத்தலிலும் (Dicision making) மற்றும் எந்த ஒரு துறை சார்ந்த முன்னெடுத்தலிலும் பெண்களின் பங்கு என்பது மிகக் குறைவாகவே காணப்படுவது ஒரு உண்மை.

**தமிழகத்துடனான ஒப்பீடு**

தமிழகத்துடன் ஒப்பிடுகையில் ஈழத் தமிழ் பேசும் மக்கள் பேசுகின்ற மொழி தமிழ் மொழி என்ற வகையில் ஒற்றுமை காணப்படுகிறதேயன்றி பேச்சுவழக்கு முதல் வாழ்க்கை முறை கலாச்சாரம் வரையிலான பல்வேறுபட்ட விடயங்களில் அவர்களுக்கென்றொரு தனித்துவம் நிலவுகிறது. இத்தகைய வேறுபாட்டிற்கு காரணமாக ஒரு வரலாற்றுப் பின்னணியும் உள்ளது.

பிரித்தானியர் வருகையானது இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் பலத்த மாற்றத்தை ஏற்படுத்தியது. பிரித்தானியர் இந்துக்களை கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்வதற்காக கல்வியை ஒரு கருவியாகப் பயன்படுத்தி வடபகுதியில் பாடசாலைகளை அமைத்தனர். அதற்குப் போட்டியாக மதமாற்றத்துக்கு எதிரான ஆறுமுக நாவலரது தலைமையிலான எதிர்ப்பு இயக்கத்துடன் இந்துக்கள் கல்லூரிகளும் தோன்றின. இதனால் கல்வி என்பது மக்கள் அடிப்படையில் பரவலாக்கப்பட்ட அதே வேளை, ஈழத் தமிழர் ஆங்கிலேய கலாச்சாரத்தின் சில முற்போக்கான அம்சங்களை உள்வாங்கியும் கொண்டனர். சமுதாயத்தில் பெண் கல்வியும், பெண்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளில் தளர்ச்சியும் ஏற்பட இது வழிவகுத்தது. இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வி முறையே பெருமளவு பெண்களுட்பட 85 சதவீதமான மக்கள் எழுத்தறிவுடையவர்களாக்கியது. கலாச்சார ரீதியான ஒரு உதாரணமாக ஆண்கள் நீள் காற்சட்டை அணிவது எவ்வாறு அங்கு வித்தியாசமாகப் பார்க்கப்படுவதில்லையோ, அதே போல இளம் பெண்கள் சட்டை அணிவதும் தமிழர் பண்பாட்டிற்கு மாறுபட்டதாக பார்க்கப்படவில்லை.

அதே போலவே உடன் கட்டை ஏறுதல் போன்ற சமூகப் பழக்கங்கள் அங்கு இல்லை. விதவைகள் மறுமணம் என்பது சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டது. பெண்கள் குடும்ப அங்கத்தவர்களுடனும், அயலார்களுடனும் சகஜமாகப் பழகும் நெகிழ்ச்சியுள்ளதான நிலை உருவாகியது.

பாரதத்தில் கல்வியறிவின்மையும், சமூக ஏற்றத் தாழ்வின் அதிகரித்த இடைவெளியின் விளைவான கொடூர வறுமையும், மக்களது வாழ் நிலையின் பல்வேறு பரிமாணங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. பொதுவாகவே இந்நிலை காணப்படும் போது சமுதாயத்தில் இரண்டாந்தரமானவர்களால் கணிக்கப்படும் பெண்களின் நிலை இன்னும் மோசமாக காணப்படுவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

குறிப்பாக தமிழகத்தில் நகர்ப்புறங்களிலும், அண்டிய பகுதிகளிலும் நடுத்தர மேல்மட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்கள் ஓரளவு உயர்கல்வி பெற முடிகிறது. உயர் கல்வி கற்று பட்டம் பெற்ற பெண்கள் கூட வேலை வாய்ப்பு பெற்றிருந்தால் திருமணமானதும் வேலையை விட்டு குடும்பத்தினுள் அடங்கிப் போய் விடுகிறார்கள். டாக்டர்களான பெண்களுக்குக் கூட இந்தக் கதியே நேர்ந்திருக்கிறது. இவ்வாறான நிலைமையை ஈழத்தில் காண்பது அரிது என்றே சொல்லவேண்டும்.

கலாச்சார ரீதியாக பார்க்கும் போது ஆடை, அணிகலன்கள் விடயத்தில் ஈழத்துப் பெண்கள் ஓரளவுக்கு தமது வசதிக்கேற்ப இலேசான உடைகளை அணியக் கூடிய வாய்ப்பினை பெற்றிருக்கிறார்கள். தமிழகத்தை பொறுத்து அதுவும் கிராமப் புறங்களில் அவர்களது அன்றாட வேலைகளுக்கும், கால நிலைக்கும், உடல் நிலைக்கும் ஒத்துவராத நிலைமையிலும் கூட பெண்கள் 6 முழம் சேலையை சுற்றிக் கொண்டு நிற்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் வாழ்கிறார்கள். இதுமட்டுமல்ல இதுபோன்ற பல நிர்ப்பந்தங்களை தமக்கு பூட்டப்பட்ட தளைகளாக உணரக் கூடிய நிலையில் கூட அவர்கள் இல்லை; அப்படிப்பட்ட உணர்வை யாரும் ஏற்படுத்த முயல்வதாகவும் இல்லை.

அடுத்து மிக மோசமான பிரச்சனையாக இங்கு வெளித்தெரிவது சீதனக் கொடுமையினால் ஏற்படும் மரணங்கள் அல்லது கொலைகளாகும். இங்கு 'வரதட்சணை' என்னும் சொல் திருமணத்தின் போது ஆணுக்கு வழங்கப்படும் சொத்து என்ற அர்த்தத்திலே வழங்கப்படுகிறது, கணவனுக்கே அவை உரித்துடையவையாகும்.

அடுத்து உடன் கட்டை ஏறுவதற்கு பாரதத்தில் இன்று சில இடங்களில் புத்துயிர் கொடுக்கப்படுவதைக் காண முடிகிறது. அண்மையில் ராஜஸ்தானில் உடன் கட்டை ஏறுதல் என்ற போர்வையில் உயிருடன் எரித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் கொடூரமானது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அப்பாவி மக்கள் படுகொலை: இந்திய அரசுக்கு கண்டனம்

ஈழ மக்கள், தமது எதிர்காலம் பற்றிய நம்பிக்கை இல்லாது, பாதுகாப்பற்ற நிலையில் சொந்தத் தாயகத்திலேயே அகதிகளாக இருக்கும் நிலை எண்ணி நாம் மிகுந்த மன வேதனை அடைகின்றோம்.

ஜூலை 29-ல் ராஜிவ் - ஜே. ஆர் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம், ஜே. ஆரினால் ஆரம்பம் முதலே மீறப்பட்டு வந்துள்ளதை அரசியல் அவதானிகளால் எளிதில் அவதானிக்க இயலும். வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிராக கிழக்கு மகாணத்தில் பிரச்சாரம் செய்வேன் என்று ஜே.ஆர். பேசியதும், குடியேற்றங்களை அவசர அவசரமாக மேற்கொண்டதும், ஊர் காவற் படையினரின் ஆயுதங்களைக் கைப்பற்றாததும் போன்றதுமான செயல்களை இந்தியாவால் கட்டுப்படுத்த முடியவில்லை. மேலும் திலீபனின் உண்ணாநோன்பு மரணத்தையும், புலிகளின் குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 பேர் சயனைட் அருந்தி மாண்டதையும் இந்திய அரசால் தடுக்க முடியவில்லை என்பது வருத்தத்திற்குரியது.

ஆனால், 'தமிழீழ விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்கப் போகிறோம்' என்று கூறி தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கும் இந்தியப் படையினர், ஹெலிகொப்டர்கள், டாங்கிகள், செல் போன்றவற்றைப் பயன்படுத்தி, அப்பாவி மக்களைக் கொலை செய்வதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்தியப் படைகள், ஈழத்தில் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளை உடன் நிறுத்தி, 09.10.87 நிலைக்குத் திரும்பும் படி வேண்டுகின்றோம். இம்மாதிரியான இந்தியாவின் விட்டுக் கொடுக்கும் செயற்பாடுகளால் தான், ஈழத்தில் அமைதியையும், சமாதானத்தையும் உருவாக்க முடியும் என்பதையும் நாம் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறோம்.

தற்போதைய நிலையில், ஈழத்தில் நிர்வாகத்தை சீர் செய்வதற்காக, இந்திய அரசு I.A.S., I.P.S. அதிகாரிகளையும், மின்சாரப் பொறியியலாளர்களையும் அனுப்பியிருப்பது, இந்திய அரசின்மீது எமக்குச் சந்தேகத்தை உண்டாக்குகிறது. இந்தியாவின் அமைதிகாக்கும் பொறுப்பானது, ''ஆட்சி நிர்வாகத்தை" (Civil Administration) மேற்கொள்ளும் வரை நீளுமேயானால், இந்தியாவின் உள்நோக்கம் குறித்து, இலங்கையின் இறையான்மையின் மீது அக்கறை கொண்டோர் சந்தேகம் கொள்ளவேண்டியிருக்கிறது. இம்மாதிரியான நடவடிக்கைகள் நிலைமைகளை மேலும் சிக்கலுக்குள்ளாக்கவே செய்யும் என்பதையும் சம்பந்தப்பட்டோர் உணரவேண்டும்.

இந்துமகா சமுத்திரப் பிராந்தியத்தில் அமைதியையும், சமாதானத்தையும் நிலைநிறுத்த, தமிழ் பேசும் மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் இன்றியமையாதது என்பதைக் கவனத்திலெடுத்து, இந்திய அரசு தனது வருங்காலச் செயற்பாடுகளை வகுக்குமேயானால் அதுவே சமாதானத்திற்கான வழி.

**ஈழ நண்பர் கழகம்**


---

அடுத்து கற்பு, ஒழுக்கம் என்பன பெண்களுக்கென்று ஒருதலைபட்சமாக வலியுறுத்தப்படுவதும், அதன் மறுவிளைவாக அது மீறப் படுவதும் ஈழத்திலும் இங்கும் காணக்கூடிய பொதுவான நிலைமையாகும்,

உழைக்கும் பெண்கள் சுரண்டப்படுவதும், குடும்ப வேலைகளையும் சேர்த்துச் சுமத்தலுனாம பிரச்சனைகளும் இங்கு பொதுவானவைகளாக உள்ளன. தமிழகத்தை பொறுத்து பல்வேறு கட்சி பெண்கள் மத்தியில் ஏதாவது முற்போக்கினை - விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனவா என்பது கேள்விக்குறியே. மேல்மட்டத்து பெண்கள் மத்தியிலுள்ள சில மாதர் அமைப்புகள், கிளப்புகளில் சந்தித்து பொழுதை போக்குவதற்கான சாதனங்களாகவே அவர்களால் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் சினிமா மோகம் என்பது இங்கு ஒரு நோய் போல தவறான போதைகளில் மக்களை ஆழ்த்தி வைக்கப் பயன்படுகிறது.

இந்த வகையில் பார்க்குமிடத்து, ஈழத்தில் பெண்கள் வரலாற்றுக் காரணிகளாலும், அங்கு நிலவும் போராட்ட சூழ்நிலைகளாலும் பெருமளவு முற்போக்கான அம்சங்களை உள்வாங்கிக் கொண்டவர்களாகவேக் காணப்படுகிறார்கள்.

www.tamilarangam.net



செ. யோகநாதன்

□

# நாட்டுப்புறக் கலைகள்

கிராமியக்கலைகள், நாட்டுப்புற இயல் பற்றிய ஆய்வுகள் விஞ்ஞான ரீதியாக மேற்கொள்ளப்பட்டதின் பிறகே, அந்தத் துறைகள் பற்றிய சரியான சித்திரம் வெளிப்பட்டது. அதற்கு முன்னர் மேல்தட்டு சிந்தனையாளர்கள் இந்தத் துறைகளை 'நாடோடி இலக்கியம்' என்றும், 'நாடோடிக் கலைகள்' என்றும் மேம்போக்கான பெயரிட்டு, அவையெல்லாம் சமுதாயத்தின் 'அறிவற்ற மக்கள் திரளின்' வெறும் புலம்பல்கள் எனவும் கூறிவந்திருக்கின்றனர். இன்னும் சிலர் இந்த நாட்டுப்புற இயலை வெறும் தாலாட்டாகவும், ஆண் பெண் உறவு பாடல்களாயும், அர்த்தமற்ற கூத்துக்களாயும் அடையாளங்காட்ட முயன்றிருக்கின்றனர். அவற்றைத் தொடர்ந்து எழுதியும் வந்திருக்கின்றனர்.

உண்மையில் இந்த நாட்டுப்புற இயல் எத்தகையது? இதன் சொந்தக்காரர்கள் யார்? இவை தெரிவிக்கும் செய்திகள்தான் என்ன?

நாட்டுப்புற இயல் என்பது அதன் பெயருக்கேற்ப சாதாரண மக்களின் ஆசாபாசங்களை அதன் குரூர வசீகரங்களோடு அந்த மக்களின் இயல்புகளுக்கேற்ப கலா நேர்த்தியோடு பிரதி பலிக்கின்ற ஒரு துறை. பல்வேறு மட்டங்களிலும் உழைக்கின்ற மக்களின் ஒளிவு மறைவற்ற எண்ணங்களின் வெளிப்பாடு. இன்னும் ஆழமாகக் கூறினால் அவர்களின் அடக்கப்பட்ட உணர்வுகளின் இன்னொரு வடிவமான வடிகால். அதை அவர்களே உருவாக்கி, அதில் தமது முகங்களை அவர்கள் கண்டு கொள்ளுகிறார்கள். அந்தக் கலை வெளிப்பாட்டுக் குரல்களிலே, தமது சொந்தக் குரல்களை அடையாளங் காணுகின்றார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாட்டுப்புறக் கலைகள் நீண்ட நெடுங்கால வரலாறு உடையவை. தமிழக நாட்டுப் பாடல்கள், கதைகள், கூத்துக்கள் என்பவை வயதால் முதிர்ந்தவை. சிலப்பதிகாரம் போன்ற காவியங்களாலும் இவற்றை அணைத்து வளரத்தான் முடிந்தது. உலகத்து காவியங்கள் மக்களிடையே வளர்ந்த நாட்டுப்புறக் கதைப் பண்புகளை தம்மோடு சேர்த்து இரண்டறக் கலந்தாற் போன்ற வரலாறு தமிழிலக்கியத்திற்கும் உரியதாயிற்று. நாட்டுப்புற இயலின் வேர்களைக் கண்டறிய விளைகிற ஆய்வாளர்கள் இந்தக் கருத்தினை உறுதியோடு தெரிவிக்கின்றார்கள்.

மக்கள் வாழும் இடங்களில் எல்லாம் நாட்டுப் புறக் கலைகள் உயிர்ப்புற்றன. மலையிலும், ஆற்றோரங்களிலும், வயற்பரப்புக்களிலும், கடலோரக் கிராமங்களிலும் வாழ்ந்த மக்கள் தமது ஓய்வு நேரமெல்லாம் ஓய்ந்திருந்து, மகிழத் தோற்றுவித்த இக்கலைகள் அவர்களது துயரங்களோடு நம்பிக்கைகளையும், தமக்கெதிரான ஒடுக்கு முறைகளுக்கு எதிராக வேகங் கொண்டு குரல் கொடுத்த துணிச்சல்களாயும் ஒலித்தன.

நாட்டுப் புறப் பாடல்களில் பெரும்பாலானவை தமது தொழிலை—அதிலுள்ள கஷ்டங்களை — அத்தொழிலில் உள்ள ஒடுக்கு முறைகளை தாலாட்டு வடிவிலும், ஆண் பெண் காதல் உரைகளிலும், ஒப்பாரிகளிலும் ஏதோ ஒரு விதத்தில் எடுத்துச் சொல்கின்றன. காற்றோடும், பறவைகளோடும், ஆற்றல்மிகு குட்டித் தேவதைகளோடும், கறவை மாடுகளோடும் இந்தக் கவிதைகள் தங்கள் துயரங்களையும், கோபங்களையும் பிரதிபலிக்கின்றன.

தனிமனிதக் கூற்றாய் அமைந்த இத்தன்மை சற்று விரிவடைகிறது. கரகமும் காவடி ஆட்டமும் இதன் பரிமாணங்கள். கிராமிய அழகுணர்வும் லயமும் இன்னொரு தடத்தில் இருவர் மூவர் பங்கு கொள்கின்ற கலைகளாக பாய்ச்சல் அடைகின்றன. நிதானமான ஆட்டம் இவ்விதம் செழுமையும் செம்மையும் கொண்ட வடிவமாய் அமைகின்ற போதிலே கிராம மக்களின் மன உணர்வுகளும் ஒட்டுமொத்தமாய் வெளிக்காட்டப்படுகின்றன. கரகம், காவடியொடு மயிலாட்டம், ஒயிலாட்டம், புலியாட்டம் போன்ற அழகுணர்வும், வீறு மிக்க கலைகள் தோன்றின.

இவை எல்லாவற்றிலும் பூரணத் தன்மை கொண்ட ஒரு வடிவமாக கூத்து வடிவம் தோன்றிற்று. ஒரு கிராமத்தின் உள்ளார்ந்த குணங்களையும், நம்பிக்கைகளையும் இந்தக் கூத்துக்கள் கிராமியக் கலைத் தன்மைகளின் ஆழமான பின்னணியில் உள் வாங்கிக் கொண்டு வடிவம் பெற்றன. முத்தமிழ் அம்சங்களைப் பின்னிக் கொண்டு, தமது வாழ்க்கை நிலைமைகளை கூத்துக்களின் வாயிலாக மக்கள் வெளிப்படுத்தினர். மக்களின் பங்கேற்பு என்பது பெருமளவு கூடிவரப் பெற்ற கலைவடிவம் கூத்து ஒன்றுதான். அதுவும் தெருக் கூத்தில் இந்தத் தன்மை மிகுந்து காணப்படுகின்றது. தெருக் கூத்தின் தாய் மண்ணான தென்னாற்காடு மாவட்டத்தில் ஆடப்படும் இக் கூத்துக்களின் உள்ளடக்கம் புராணக் கதைகளினைக் கொண்டதாயினும், அந்தக் கதாபாத்திரங்களின் மனங்கள் அந்த மக்களின் மனக்குமுறல்களாகவே துடித்துக் கொண்டிருப்பதனை உற்று நோக்குகிறவர்கள் அறியலாம்.

இவை நாட்டுப்புறக் கலைகளின் தோற்றம் பற்றிய விவரணம். ஆனால் இன்றைக்கு இவற்றின் நிலை யென்ன?

இந்தக் கலைகளெல்லாம் இன்று வறுமையில் வீழ்ந்துபட்டிருக்கின்றன. மிகச் சிறந்த கிராமியக் கலைஞர்களெல்லாம் இக்கலைகளுக்கு போதிய ஆதரவின்மையைக் காரணங்காட்டி, அந்தத்துறையையே கவலை கனக்கிற மனதினோடு விட்டு விலகிப் போய்க் கொண்டிருக்கின்றனர். இதற்குக் காரணமாக எதைச் சொல்லலாம்? பொது மக்களின் ரசிக்கும் தன்மையும் வாழ்க்கை முறைகளும் மாறிக் கொண்டு வருவதைத்தான் காரணமாகக் கூற முடியுமா? சிலர் 'ஆம்' என்று பதில் கூறுகின்றனர்.

இது சாமர்த்தியமான பதிலாகக் கூறப்படுகிறது என்பதை மேம்போக்காகப் பார்க்கிற யாரலுமே அறிந்து கொள்ள முடியாது. நியாயம் போலவே இந்தப் பதிலை பலரும் முன் வைக்கிறார்கள். ஆனால் இது திட்டமிட்டுக் கூறப்படுகிற சாமர்த்தியமான பதில்.

சுரண்டல் நிறைந்த சமுதாயம் ஒன்றிலே, மக்கள்கலைகள் என்பன என்றைக்கும் ஆதரவு பெற்று வளர வாய்ப்பிருப்பதில்லை. இந்த சமுதாய அமைப்பு, மக்கள் கலாசார வளர்ச்சியை ஆதரிப்பதில்லை. எப்படி சிறுபான்மை தொகையினர் தமது கலாச்சாரத்தை பெரும்பான்மையான மக்கள் மீது திணிக்கிறார்களோ, அது போல பெரும்பான்மை உழைக்கும் மக்களின் கலைகளை இவர்கள் மேலோங்க விடுவதில்லை.

ஆனாலும் அரசியல் லாபம் கருதி இந்த மக்கள் கலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**மிகச்சிறந்த கிராமியக் கலைஞர்களெல்லாம் இக்கலைகளுக்கு போதிய ஆதரவின்மையைக் காரணங்காட்டி, அந்தத்துறையையே கவலை கனக்கிற மனதினோடு விட்டு விலகிப் போய்க் கொண்டிருக்கின்றனர். இதற்குக் காரணமாக எதைச் சொல்லலாம் ? பொது மக்களின் ரசிக்கும் தன்மையும் வாழ்க்கை முறைகளும் மாறிக் கொண்டு வருவதைத்தான் காரணமாகக் கூற முடியுமா ? சிலர் 'ஆம்' என்று கூறுகின்றனர்.**

களுக்கு, ஆதரவு கொடுப்பது போல பாவனைகள் செய்யப் படலாம். உதவிப் பணம் என்ற பெயரில் சில நூறு ரூபாக்கள் எலும்புத்துண்டு களைப் போல எடுத்து வீசப் படலாம். அரச விழா மேடை களில் களைப்படையும் வரை இவர்கள் ஆடவும் பாடவும் விடப்பட்டு, நீட்டிய பத்திரத் தில் ஒப்பமிட்டு கொடுத்த தொகையைப் பெற்றுக் கொண்டு, பசித்த வயிற்றோடு அவசர அவசரமாக மேடையி லிருந்து இறக்கப்பட்டு, ஊருக்கு அனுப்பிவைக்கப் படலாம்.

மேடையிலே ஆடுகின்ற இந்தக் கலைஞர்களின் வெடிப்பு விழுந்த பாதங்களை யார் பார்க்கிறார்கள் ? நைந்து கிழிந்து போன ஆடைகளை யார் கவனிக்கிறார்கள் ? பசித் துக் களைக்கிற உடலின் தளர்ச்சி எவனுடைய மனதைத் தொடுகின்றது ?

தெருக் கூத்தின் ஒப்பற்ற கலைஞனான கண்ணப்பதம்பி ரானின் மகன் காசி சொல்லுவதுதான் இன்றைய நாட்டுப் புறக் கலைஞனின் உண்மை யான வாழ்வு நிலை.

''ஐந்து தலைமுறையாக எங்கள் குடும்பம் தெருக் கூத்து ஆடி வருகின்றது. பொருளாதார வசதியில்லாமல் நான் கூத்துக் கற்றுக் கொள் ளாமல் அஞ்சலகத்தில் வேலை செய்து வருகின்றேன்...''

நாட்டுப்புறக் கலைகள் எல் லாம் நாட்டுப்புறத்து ஏழை எளிய மக்களின் ஒப்பற்ற கலாச்சார சொத்துக்கள். இவற்றை அவர்களே தோற்று வித்தார்கள், உயிர்ப்புறவைத் தார்கள், வாழவைக்கிறார்கள். வாழவும் வைப்பார்கள். இவர் களிடமிருந்து மற்றவர்கள் கற்றுக் கொள்ள முடியுமே தவிர, இவர்களுக்கு கற்பிக்க முனைவது மடமையும் மம தையுமான செயலெனவே எண்ணத் தோன்றுகிறது.

கிராமியக் கலைகளை நவீ னப்படுத்த முனைகிற பலரும், மக்களின் அறியாமை, கலா நேர்த்தியின்மை என்பன வற்றை களைந்து கிராமியக் கலைக்கு புதுவடிவம் கொடுக் கப் போவதாக பிரகடனம் செய்கிறார்கள். இது அபத்த மும் அறியாமையும் ஒன்றி ணைந்த பிரகடனமென்றே சொல்லத் தோன்றுகின்றது.

கிராமியக் கலைகளின் உயி ரோட்டத்தைப் புரிந்து கொள் ளாமல், தொழில்நுட்ப வசதி களினால் மட்டும் மாறுதலையோ, சீரமைப்பையோ கொண்டு வரும் முயற்சிகள் அந்தக் கலைகளை சேதப் படுத்துமே தவிர செழுமை கொள்ள வைக்க முடியாது.

கிராமியக் கலைகள் - நாட் டுப் புற இயல் என்பன எப் போது மக்களின் அபிலாஷை களுக்கேற்ப வளர்ச்சியடைய முடியுமென்பதற்கு, இதே மக் களை மகிமைப் படுத்தும் சோஷலிஸ அமைப்பு உருவா கிற போதுதான் என்ற பதி லையே கூறமுடியும். இதை விட வேறு பதிலுமில்லை ; வழியுமில்லை.

ஆனால் மக்களை ஒன்றி ணைக்கவும், சமுதாய மாற்றத் தத்துக்கான போராட்டத்தில் ஈடுபடுத்தவும் — இந்த கலா சார வடிவங்களை புரட்சிகர சக் திகள் தமது வடிவங்களாக்கி கொண்டு போராட்ட வீறினை ஏற்படுத்த முடியும். அதை யும் மக்களிடமிருந்து கற்றுக் கொண்ட பின்னரே செழுமைப் படுத்தி மக்களுக்கு திரும்பவும் வழங்க முடியும்.

மக்கள் கலைஞரான கத்தா ரிடம் ஒரு கேள்வி கேட்கப் பட்டது :

''பரத நாட்டியம் போன்ற ஆடற்கலைகளினூடாக உங் கள் கருத்துக்களை நீங்கள் வெளிப்படுத்தினால் என்ன ?''

அதற்கு கத்தார் பின்வரு கிற பதிலைச் சொன்னார் :

''பரத நாட்டியம் என்பது அரசவைக் கலை. அது அத் தகைய குணாம்சங்கள் கொண்டவருக்கான கலை. அதை ஏன் நான் எனது கருத் தைச் சொல்வதற்காக எடுத் துக் கொள்ள வேண்டும் ? நான் ஏழை எளிய மக்களுக்கு தேவையான கலையை, அவர் களுக்குச் சொந்தமான கலை வடிவத்திலேயே வெளிப்படுத் துவேன்; அதுவே சரியான செல் நெறியும்...''

கத்தாரின் வார்த்தைகளை கிராமியக் கலைகளை வேரோடு பிடுங்கி, வேறிடத்தில் நட்டு நவீனமயப் படுத்துவோ ரும் நிச்சயமாக யோசித்துப் பார்க்கவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுதலைப் போரின்
மறுபக்கம்

# தமிழர்களின் தேசிய அந்தஸ்துக்கான போராட்டம் வெற்றியடைந்தே தீரும்

## ஈழப் புரட்சி அமைப்பின் சங்கர் பேட்டி

**இந்திய இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே நடைபெற்று வரும் மோதலில் ஈழப்பகுதி ரணகளமாகி வருகிறது. சர்வதேச நிலைமைகளோடு ஈழப் போராட்டத்தின் இன்றைய சூழலைப் பொருத்திப்பார்த்து, பாலத்தின் கேள்விகளுக்கு ஈழப் புரட்சி அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் சங்கர் பதில் அளித்துள்ளார். பேட்டி விபரம் பின்வருமாறு :**

☐ ஈழத்தின் தற்போதையச் சூழ்நிலையை (Current situation) எப்படித் தாங்கள் கணித்திருக்கிறீர்கள்?

☐ ☐ ஒன்று, உடனடியாக இங்கு ராணுவ நிலைமை நீக்கப்பட வேண்டும். அதை எப்படிச் செய்யலாம்? இந்திய அரசோடு எல்.டி.டி.இ பேச்சுவார்த்தை நடத்துகிறது. அல்லது தொடர்புகளை வைத்திருக்கிறது என்ற நிலையிலே இரு தரப்பும் உடனடியாக ஒரே நேரத்தில் போர் நிறுத்தம் கொண்டு வந்து, பேச்சுவார்த்தைகளையும் சிவில் நிர்வாகத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

ஆனால் இந்த இடைப்பட்ட காலத்தில் சிறிலங்கா அரசு, ஒப்பந்தத்தினுடைய முக்கிய அடிப்படை அம்சமே இல்லாத, ஷரத்துக்களை பாராளுமன்றத்துக்குக் கொண்டு செல்கிறது. கிழக்கு மாகாணத்திற்கு ஒரு மாகாண சபை வடக்கு மாகாணத்திற்கு ஒரு மாகாணசபை என்ற நிலையில், சுப்ரீம் கோர்ட்டின் அபிப்ராயத்தைக் கேட்டுத்தான் அமல்படுத்த வேண்டும் என்ற வகையில் செயல்படுகிறது. வடக்கு கிழக்கு இணைந்த ஒரு சபை உருவாகுமா என்ற கேள்வி உருவாகி இருந்தது. சமீபத்தில் சுப்ரீம் கோர்ட்டும் பாராளுமன்றமும் மாகாண சபைக்கு ஒப்புதல் தெரிவித்துள்ளது.

☐ இந்த ஒப்பந்தத்தின் மூலம், ஆரம்பம் முதலே தமிழ் மக்கள் மத்தியிலும், சிங்கள மக்கள் மத்தியிலும் நல்ல தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில்லை. ஆனால் இந்த ஒப்பந்தம் திணிக்கப்பட்டுள்ளது. இந்தத் திணிப்புத் தீர்வு என்பது தொடர்ந்தும் எப்படி நீடிக்க முடியும்?

☐ ☐ திணிக்கப்பட்ட தீர்வு என்பது ஒரே பக்கமாகவே விரும்பப்பட்டால் தொடர்ந்தும் இருக்க முடியும். நீங்கள் கூறுவது போன்று இரண்டு பக்கமுமே அதை ஈடு கொள்ள முடியாது என்ற நிலைக்கு வந்தாகிவிட்டது. இதை எப்படியாவது தந்திரோபாயமாகப் பாவித்துப் போராளிகளுக்கும், இந்திய அரசுக்கும் இடையே மோதலை உருவாக்குவதன் மூலம், போராளிகளுக்கு இராணுவ பலம் இல்லை என்ற நிலையைக் கொண்டுவர சிறிலங்கா அரசு விரும்புகிறது. இனி ஒப்பந்தம் தேவையில்லை என்ற நிலைதான் சிறிலங்கா அரசாங்கத்திற்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**'அப்படி ஒரு நிலைமை அங்கு உருவாகி வரும்போது பல எதிர்ப்புகள் மறுபடி தோன்றுகிற ஒரு சூழ்நிலைதான் நாங்கள் காணமுடியும். அது மட்டுமல்ல, அந்த நேரத்திலே இந்திய இராணுவம் அங்கு ஆக்கிரமிப்பு செய்கிறதென்ற ஒரு நிலையை வெளிப்படையாக கொண்டு வர வேண்டிய ஒரு தேவை ஏற்படும்.'**

தேவையாக இருக்கலாம். ''மாகாண சபைதான் எங்களுக்கு கொடுக்க முடியும். ஏனென்றால் எங்களுடைய உயர்நீதி மன்றம், சட்டம், அரசியல் சாசனம் என்பன இவைகளுக்கு இடம் கொடுக்கவில்லை என்று சொல்கிற பொழுது, 'தமிழர்களுடைய அடிப்படை அபிலாசைகள் தீர்க்கப் படவில்லை என்று சொன்னால் அதைப்பற்றி ஏன் நீங்கள் கவலைப்படுகிறீர்கள்? போராளி களின் பிரச்சனை இப்போது இல்லை. எனவே மாகாண சபையிலேயே அதிகாரங்களை நாம் வழங்கலாம்; நீங்கள் ஒத்துழைத்தால் அது சரிவரலாம்'' என்று ஜெயவர்த்தனா கூறும் நிலைமை உள்ளது.

இதில் இந்திய அரசாங்கம் இந்த ஒப்பந் தத்தை கைச்சாத்திடுவதற்கும் நடைமுறைப் படுத்துவதற்கும் அவசரப்பட்டிருக்கிறதென்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

☐ இந்தியாவின் பிராந்திய நலம் என்பது சரி. அதற்காக இராணுவ நடவடிக்கை என்பது சரிதானா? இதற்கு ஒப்பந்தத்தில் வழியுள் ளதா?

☐☐ ஒரே ஒரு வரி, அதாவது ஒப்பந்தத்தை சிறிலங்கா அரசு அமலாக்கும் போது இராணுவ உதவி தேவை என்று இந்திய அர சாங்கத்தை கேட்கும் பொழுது இந்திய அரசாங் கம் அதற்கு இணங்கும் என்கிற ஒரு அம்சம் மட்டும்தான் இருக்கிறது. ஆனால் பின்னர் நடந்ததை பார்க்கும் பொழுது இதுதான் முக் கிய அம்சமாக இருந்த மாதிரியான ஒரு தொணிப்பு காணப்பட்டது. அதாவது ஒப்பந்தம் கையெழுத்திட்ட அதே வேளையிலேயே இராணு வம் ஈழத்துக்குள் நுழைந்தது.

☐ இராணுவம் அனுப்பியது கூட தமிழர் களுடைய பாதுகாப்புக்குத் தான் என்று கூறி னார்கள். ஆனால் நிலைமைகள் இப்போது மாறியுள்ளதே?

☐☐ இதில் ஒரு வித்தியாசம் இருக்கிறது. 'தமிழர்களை பாதுகாப்பதற்காக இலங்கை அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் ஒப் பந்தத்தை கொண்டு வந்துள்ளன. அது இந் தியாவின் நலன்களை உள்ளடக்கியதாக இருந் தாலும் முக்கியமாக தமிழர்களுடைய நலன் களை பாதுகாப்பதற்காகத் தான். ஆகையினால் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றும் போது அது தமிழர்களை பாதுகாக்கும் என்ற அடிப் படை தான் அதில் உள்ளது. அதற்காக இராணுவம் அனுப்பப்படுகிறது' என்றெல்லாம் கூறப்படுகிறது.

இங்கே மாற்றம் என்னமாதிரி என்றால், தமிழர்களே இந்த ஒப்பந்தம் தங்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதா, இல்லையா என்பதில் ஒரு முடிவில்லாத நிலையில் இது கொண்டுவரப்பட்டி ருப்பதால் முக்கியமாக இயக்கங்கள் அதை எதிர்க்கும் நிலைமை ஒன்றை காணக் கூடியதாக இருக்கிறது. இதனால் இன்று இந்திய அரசாங் கத்தை பொறுத்த வரை இராணுவ நடவடிக்கை 'ஒப்பந்தத்தை அமலாக்குவதற்காக எடுக்கப் பட்ட நடவடிக்கை என்றும் இது தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கை அல்ல; ஒரு சில தீவிர வாதிகள், பயங்கர வாதிகள் என்று இன்று கூறப்படுகிற சிலர் தான் இதை குழப்புவதற்கு இருக்கிறார்கள்; அவர்கள் தான் தங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கவும், ஒப்பந் தத்தின் முக்கிய அம்சத்தை ஏற்கவும் மறுக் கிறார்கள். அதனால் இந்திய இராணுவம் இந்த நடவடிக்கையை எடுக்கவேண்டியச்சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இது தமிழர்களுக்கு எதி ரான ஒப்பந்தமல்ல தமிழர்களை பாதுகாப்பதற் கான ஒரு நடவடிக்கை என்ற ஒரு நிலையில் பேசுகிறார்கள்''.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**இதில் இந்திய அரசாங்கம் இந்த ஒப்பந்தத்தை கைசாத்திடுவதற்கும் நடைமுறைப் படுத்துவதற்கும் அவசரப்பட்டிருக்கிறதென்பது வெளிப்படையாகத் தெரிகிறது.**

□ இன்று உள்ள நிலைமையில் ஈழம் என்பது கனவு போலத் தான் தெரிகிறது; அது கானல் நீர் என்பதை உண்மையாக்கியது இந்திய அரசாங்கம் தான் என்று நினைக்கிறார்கள் சிலர். அது எந்தளவுக்கு சரியென்று நினைக்கிறீர்கள்?

□□ தேசிய விடுதலை அல்லது தேசிய எழுச்சி என்கிற போது பல கால கட்டங்களில் சமுதாயங்கள் இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு உட்படுவதை நாம் வரலாற்றில் பார்த்திருக்கிறோம். தமிழ் மக்களை பொறுத்தவரை எடுத்துப் பார்த்தால், தேசிய அந்தஸ்த்து என்பது என்றைக்காவது நிதர்சனமாக வேண்டிய வரலாற்று நியதியாக நாங்கள் பார்க்கிறோம். அது 1987ல் வரவில்லை என்றால் 97ல் வருகிறதா என நிர்ணயிப்பது கடினம். ஆனால் ஈழம் என்ற வடிவத்திலோ அல்லது வேறு எந்த வடிவத்திலோ தமிழ் பேசும் மக்களின் தேசிய அந்தஸ்த்து என்பதை நிர்ணயிக்கிற நிலை கட்டாயம் வந்தே தீரும்.

□ இந்த போராட்டம் தேசிய அந்தஸ்து கோருகிற போராட்டம் மட்டும் தானா? அல்லது தனி ஈழப் போராட்டமா?

□□ தேசிய விடுதலை எந்தளவுக்கு முன்னெடுக்கப்படுகிறது என்ற ஒரு நிலையில் ஈரோஸ் ஆரம்பத்திலிருந்தே தேசிய 'அந்தஸ்த்து' என்ற ஒரு நிலைப்பாட்டைத்தான் எடுத்து வந்தது. அந்த தேசிய அந்தஸ்தை ஈழம் என்று சிலர் கூற விரும்பினால் அதை ஈழம் என்று கூறலாம். தமிழர்கள் வாழும் பிரதேசம் (Political Demarkation) என்பதில் ஒரு தேசிய அந்தஸ்த்தை நாங்கள் நிர்ணயிக்கிற பொழுது இதில் வித்தியாசமான பார்வையைக் கொள்கிறோம்.

□ தனி ஈழம் என்பது காலப் போக்கில் தீர்மானம் செய்ய வேண்டிய ஒன்றா?

□□ அது மக்களினுடைய நிலையில் தீர்மானிக்கப்படும். அதாவது தேசிய அந்தஸ்த்து என்ற நிலை மக்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை என்றால் தேசிய எழுச்சியை அடுத்தக் கட்டத்திற்கு எடுத்துச் செல்வார்கள் இதுதனி நாடாக இருக்க வேண்டும் என்ற நிலைக்கு கொண்டு போவார்கள். அதை தேசிய அந்தஸ்த்துக்குரிய ஈழம் என்று சொல்வதில் எந்தவிதமான தப்பும் இருப்பதாக நாங்கள் கருதவில்லை.

□ இப்போது பிரச்சனை என்பது LTTE முழுமையாக ஆயுதங்களை ஒப்படைக்கவில்லை; அதனால்தான் இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கிறதென்று இந்திய அரசாங்கம் கூறுகிறது. அப்படியானால் LTTE உண்மையில் இன்னும் ஆயுதங்களை ஒப்படைக்காமல் தப்பு பண்ணியிருக்கிறதா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

□□ தனியே கேள்வியை மட்டும் எடுத்து நாங்கள் பதில் சொல்வதனால் ஆயுதங்களை ஒப்படைக்கவில்லை என்பது வெளிப்படையான உண்மை. ஆகையால் அது தவறு என்கிற ஒரு நிலை இருப்பதும் உண்மை. ஆனால் இதை நாங்கள் ஒட்டுமொத்தமாகத்தான் எடுத்துப் பார்க்க வேண்டும். LTTE அவர்களுடைய நடவடிக்கைகளால் கடந்த 2 வருடங்களுக்குள் பல எதிர்ப்புகளை ஈழத்துக்குள் தேடியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல ஒப்பந்தம் கைச்சாத்திட்டு சில வாரங்களுக்குள்ளேயே பல இடங்களில் மாற்று இயக்கங்கள் LTTEன் முகாம்களையும், தோழர்களையும் தாக்கியது உண்மை. இந்த நிலையில் LTTE இடைக் கால நிர்வாகம், அதிகாரம், சட்டம், ஒழுங்கு இவைகளெல்லாம் தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள்ளும், பொறுப்பிற்குள்ளும் கொண்டு வந்த பிறகு ஆயுதங்களை ஒப்படைக்கலாம் என்ற நிலையில் இருந்திருப்பதாகத் தான் தெரிகிறது. ஆனால், ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் போராளிகள் மட்டும் தவறினார்கள் என்பது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**'அவர்கள் ஆயுதத்தை நிரந்தரமாகவே ஒப்படைக்காமல் வைத்திருப்பார்களா அல்லது அப்படிப்பட்ட ஒரு நோக்கமும் சிந்தனையும் இருந்ததா என்ற கேள்வியை கூடுதலாக எழுப்ப வேண்டியுள்ளது.'**

உண்மை அல்ல. சிறிலங்கா அரசாங்கமும் இதில் பல இடங்களில் தவறாக நடந்திருக்கிறது என்பது தெரிகிறது. குறிப்பாக குடியேற்றத் திட்டங்கள் நடத்தும் பொழுது பல இடங்களில் இதனை நாங்களே குறிப்பிட்டிருக்கிறோம். மற்றது கைது செய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் பிராந்தியத் தலைவர்களின் மரண நிகழ்வு, கைதுசெய்யப்பட்டவர்களை சிறிலங்கா அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஒப்பந்தத்தில் ஒரு ஷரத்துமில்லை. இத்தகையச் சூழ்நிலையே அவர்களது நடவடிக்கைகளுக்கு காரணமாக இருந்ததென்பதை LTTEயின் அறிக்கைகளில் காணக்கூடியதாக இருக்கிறது. ஆதலால் இதை நாங்கள் ஒட்டுமொத்தமாகத்தான் பார்க்க வேண்டும். **அவர்கள் ஆயுதத்தை நிரந்தரமாகவே ஒப்படைக்காமல் வைத்திருப்பார்களா அல்லது அப்படிப்பட்ட ஒரு நோக்கமும் சிந்தனையும் இருந்ததா என்ற கேள்வியை கூடுதலாக எழுப்ப வேண்டியுள்ளது.**

☐ புலேந்திரன், குமரப்பா போன்ற 15 விடுதலைப்புலிகள் சயனைட் உண்டு இறந்த பின் இந்திய அரசு எடுத்த ராணுவ நடவடிக்கையை ஆதரிக்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா?

☐ ☐ இந்திய அரசின் ராணுவ நடவடிக்கை புலேந்திரன், குமரப்பா போன்றோரின் மரணத்தால் ஏற்படவில்லை. ஆனால் அவர்களின் மரணத்தைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் கிழக்குப் பகுதியில் சிங்கள மக்களைத் தாக்கிய ஒரு நிலையிலும், சிங்கள ராணுவமும் சிறிலங்கா அரசாங்கமும் இந்நிலையை தடுத்து நிறுத்திட இந்திய அரசைக் கோரின. LTTEஇன் ஆயுதங்களை கைப்பற்றாமல் இதைத் தடுக்க முடியாது என்ற நிலையில் தான் இந்திய ராணுவம் கிழக்கு மாகாணத்தில் LTTE தோழர்களை கைது செய்ததும், வடக்கில் குறிப்பாக குடாநாட்டில் ஆயுதத்தை எடுக்க வந்த இடத்தில், எதிர்த்தோம் என்று LTTE கூறுகிறது. இந்திய ராணுவம் இராணுவரீதியாக ஒடுக்கப் போனார்களா, இல்லை சும்மா போனார்களா என்பது தெரியவில்லை. ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு ஆயுதங்களை எடுக்க வேண்டும் என்ற நிலையில், இந்திய அரசாலும் இந்த நடவடிக்கையைத் தவிர வேறு நடவடிக்கையை எடுக்க இயலாது.

☐ ஏற்கனவே சிறிலங்கா அரசாங்கமும், ஊர்க்காவல் படையினரும் தவறுகள் செய்துள்ளனர். அவர்கள் மேல் ஏன் இந்திய இராணுவம் நடவடிக்கை எடுக்கவில்லை?

☐ ☐ இதில் கூடுதலாக இந்தியாவின் நடவடிக்கைகள் பலவீனமாகவே உள்ளது. ஈழக் கோரிக்கை தான் கூடுதலான Pressureக் கொண்டு வந்திருக்கும் என்பதை நாங்கள் காணக் கூடியதாக இருக்கிறது. ஏனெனில் கிழக்குமாகாணத்தில், ஊர்க்காவல்படை பொது மக்களை அச்சுறுத்துகிறது. திருகோணமலை அசம்பாவிதங்கள் என்பன போன்றவற்றில் விடுதலைப் புலிகள், கூடுதலாக பக்குவமாக நடந்து கொண்டிருப்பார்களேயானால் இந்தப் பிரச்சனை தமிழர்களுக்கு எதிராக திசை திரும்பாத நிலையைப் பார்த்திருக்க முடியும். முக்கியமாக தமிழ் இளைஞர்களைக் கொழும்புக்குக் கொண்டு போன செயல் இந்திய அரசுக்கும் LTTEக்கும் இடையிலே பிரச்சனையைக் கொண்டு வரவேண்டும் என்ற அடிப்படையிலேயே சிறிலங்கா அரசு செய்தது. இதில் இந்தியா அரசாங்கம் முதலிலேயே சிங்கள ராணுவத்தின் மேல் நடவடிக்கை எடுத்திருந்தால், இப்பொழுது புலிகள் மேல் எடுத்திருக்கிற இந்திய அரசின் நடவடிக்கையையும் நாங்கள் சரி என்று சொல்லலாம்.

☐ ஏற்கனவே கொரில்லாப் போர் நடைபெற்ற நாட்டில், சமாதானத்திற்காக இராணுவத்தை அனுப்பியிருக்கிறோம் என்று கூறுகிறார்கள். இராணுவமானது என்றைக்குமே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமாதானப் பணியைச் செய்யவே முடியாது. ஈழத்தில் இந்திய அமைதிப் படை, சிங்கள இராணுவம் மாதிரியே செயற்படுகிறது. சிங்களப்படைகளால் அடிபட்ட தமிழர்களையே இந்திய ராணுவம் மீண்டும் அடிக்கிறது. இதில் ஈரோஸ் நிலை என்ன?

□ □ இதில் சமாதானப்படை என்பதைவிட அமைதிப்படை என்று தான் அதிகம் குறிப்பிடுகிறார்கள். அமைதிப் படைக்கும், சமாதானப் படைக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஒப்பந்தத்தை அமலாக்கும் பட்சத்தில் அமைதி ஏற்படும் என்ற மாதிரியான நிலையில் தான் IPKF அய் பார்க்க முடிகிறது. அமைதியை உண்டாக்குவதற்கு ஒரு ஒப்பந்தம், அதை அமலாக்குவதற்கு ஒருபடை. தமிழ்ப் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைப்பதன் மூலம் தான் அமைதியைக் கொண்டு வரலாம் என்று அவர்கள் நம்பினார்கள்.

இதற்கு சில உதாரணங்களை சொல்ல விரும்புகிறேன். சைப்ரசில், துருக்கி இராணுவம் உட் சென்றது. அங்கு சைப்ரஸ் அரசாங்கத்தின் வேண்டுகோளை ஏற்றுப் போகவில்லை. பிரச்சனை ஒன்று உருவாகியது. மக்கள் மத்தியில் குழப்பம், துருக்கி மக்களைக் காப்பதாகக் கூறி துருக்கி ராணுவம் உட் சென்றது. ஆனால் மக்கள் மத்தியில் எந்தவிதமான எதிர்ப்பும் இருக்கவில்லை. உடனடியாக ஐ.நா. சபை துருப்புக்களும் கொண்டுவரப்பட்டு சைப்ரசில் இருந்த கிரேக்கப் படைக்கும் துருக்கிய படைக்கும் சமாதானப்படையாகச் செயல்பட்டது. இந்த மாதிரி பிரச்சனையை சுமுகமாக முடித்தார்கள். இரண்டாவது, லெபனான் பிரச்சனையைப் பார்ப்போமேயானால் ஆரம்பத்தில் லெபனான் அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி, பெரும்பான்மையாக சிரியா ராணுவமும், ஏர்மன், அல்ஜீரியா மற்றும் இரண்டு அரபு நாடுகளின் துருப்புக்களும் அங்கு போனது. ஆனால் காலப் போக்கில் மற்ற நாடுகளெல்லாம் திரும்பிப்போக லெபனான் சிரியா ராணுவத்தின் பொறுப்பாகியது. சிரியா ராணுவம் அங்கேயே எதிர்ப்பை நோக்கி, அங்கு பாலஸ்தீனர்களோடும், லெபனிய இயக்கங்களோடும், Christian Falange படைகளோடும் மோதியது. லெபனான் அதே படைக்கு உதவிகளையும் செய்து இன்றைக்கு பாலஸ்தீனர்கள் வெளியில் போவதற்கு உடந்தையாக இருந்தது. இந்த வகையில் அங்கு சமாதானமும் இல்லை, அமைதியும் இல்லை. ஆக, சிரியன் ராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் லெபனானின் பெரும்பான்மையான பகுதி கொண்டு வரப்பட்டு இருக்கிறது. சிரியாவினுடைய Back yard ஆன லெபனான் சிரியாவின் control இன் கீழ் இருக்கிறது. சிறிலங்கா இந்தியாவின் Back yard ஆக மாறுமா என்பதை பொறுத்து இருந்து பார்ப்போம்.

□ ஈழத்திற்கு இந்திய இராணுவம் போயிருக்கிறது. LTTEன் நிலைப்பாடாக மாத்தையா இதை ஒரு இராணுவ ஆக்கிரமிப்பு என்று கூறியிருக்கிறார். ஈரோஸ் நிலைப்பாடு என்ன? இராணுவ ஆக்கிரமிப்பு என்று நினைக்கிறீர்களா?

□ □ ஆக்கிரமிப்பு என்று சொல்லுவது கடுமையான வார்த்தை. LTTE இன்றைக்கு உள்ள நிலைமையில் அவர்கள் அதை பயன்படுத்தலாம்; இருந்தாலும் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருகின்றோம் என்று தான் சொல்லுகிறார்கள். எதை ஆக்கிரமிப்பு இராணுவம் என்கிறார்களோ அந்த ராணுவத்தின் அரசோடு தொடர்ந்து பேசியிருப்பதும், சுமூகமான சூழ்நிலையை உருவாக்க தயாராக இருப்பதென்கிற இரண்டு நிலையையும் சொல்லித்தான் அவர்கள் அந்த ஆக்கிரமிப்பு என்ற சொல்லை பாவிக்கிறார்கள். இதில் ஈரோஸின் நிலைப்பாடு ஒப்பந்தத்தை நாங்கள் ஆரம்பத்திலிருந்தே, அதில் பல இடங்களில் எங்களுக்கு அதிருப்தி இருந்தாலும் முக்கியமாக பல பிரச்சனைகளை பற்றி முன்னரே சொல்லியிருந்தோம். ஆனால் இதை அமலாக்குவதை நாங்கள் எதிர்க்க மாட்டோம் என்ற நிலையில் ஆயுத ஒப்படைப்பு, அதனுடைய முக்கிய அம்சமாக இருப்பதற்கு நாங்கள் முழு ஆதரவாக எங்களுடைய ஆயுதங்களை ஒப்படைத்த நிலையிலும், இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு நாங்கள் எங்களால் முடிந்த அளவிற்கு முன்னின்றோம். அதற்கு பிறகு நடந்த ஒரு பிரச்சனை எங்களுடைய தோழர்கள், முக்கியமான தலைவர்கள் கூட இன்று கைது செய்யப்பட்டார்கள். பல இடங்களில் எங்களுடைய முகாம்கள் முற்றுகையிடப்பட்டு பிரச்சனையாக உள்ளது. ஆனால் அதை ஒரு ஆக்கிரமிப்பு என்ற ஒரு நிலையில் பார்க்கவில்லை.

□ இன்றுள்ள செய்தித் தாள்களை எல்லாம் பார்க்கின்ற போது முன்னிருந்தது சிங்கள இராணுவ முகாம்கள். ஆனால் இப்போது இந்திய இராணுவ முகாம் இருக்கிறது. இந்திய இராணுவம் ஆயுதங்களை கைப்பற்றி உள்ளது. இப்போது நிர்வாகத்தையும் இராணுவமே எடுத்துக் கொண்டு வருகிறது. அதற்கு இங்கே இருந்து சிவில் உத்தியோகத்தர்கள் எல்லாம் போகிறார்கள்; பாடசாலை ஆசிரியர்களும் போகிறார்கள். இது பிரிட்டிஷ் பாணியான முறையாகத்தான் இருக்கிறது. மீண்டும் தமிழ்மக்களை இந்திய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இராணுவத்தின் ஆதிக்கத்தின் கீழ் தான் கொண்டு வருவதாக இது இருக்கிறது. இந்த நிலைமையில் இப்போது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் ?

□ □ இதிலே தான் கூடுதலாக நாங்கள் கவனம் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றோம். இதை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை யென்றால் - LTTE மட்டுமல்ல, தமிழ் பேசும் மக்களுடைய தலைமை என்று இன்று நாங்கள் கூறக்கூடிய அனைவருமே பெரிய வரலாற்றுத் தவறு விடுகிற நிலை இருக்கிறது. முக்கியமாக இன்றுள்ள நிலையில் ஆயுதங்களை ஒப்படைத்தோ, ஒப்படைக்காமலோ போராட்டம் உடனடியாக நிறுத்தப்பட்டு, பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டு, இடைக்கால நிர்வாகம்-ஆலோசனை சபை இவைகள் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களுடைய தலைமையிலும், அவர்களுடைய பொறுப்பிலும் உடனடியாக கொண்டு வரப்பட வேண்டிய ஒரு தேவை இருக்கிறது. அதில் எவ்வளவிற்கு நாங்கள் தாமதிக்கின்றோமோ அவ்வளவிற்கு நாங்கள் அதை வேறு யாராவது எடுத்து நடத்துவதற்கு அனுமதிக்கிற மாதிரியான ஒரு நிலையை உருவாக்குகிறோம். என்றே அர்த்தம்.

□ அதாவது, சிவில் நிர்வாகம் இடைக்கால அமைப்பு என்பதெல்லாம் சிறிலங்கா அரசாங்கம் தராதென்று ஒரு கருத்து இருக்கிறது. ஆனால் இப்போது சிறிலங்கா அரசாங்கம் என்பதல்ல - இந்திய அரசாங்கமே அதை அனுமதிக்காது என்பதாகவே இன்றைக்கு நிலைமை இருக்கிறது. அவர்கள் இங்கிருந்து IAS உத்தியோகத்தர்களை, IPS உத்தியோகத்தர்களை, மத்திய போலீசை, ஆசிரியர்களை அனுப்புகிறார்கள். எனவே இந்திய அரசாங்கம் அதற்கு தடையாயிருக்குமென்று தான் நாங்கள் நினைக்கின்றோம். இடைக்கால நிர்வாக சபைக்கே கூட அந்த தமிழ் பகுதி மக்களிடமே சிவில் நிர்வாகத்தை ஒப்படைப்பார்களென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை?

□ □ அப்படி ஒரு நிலைமை அங்கு உருவாகி வரும்போது பல எதிர்ப்புகள் மறுபடி தோன்றுகிற ஒரு சூழ்நிலைதான் நாங்கள் காணமுடியும். அது மட்டுமல்ல அந்த நேரத்திலே இந்திய இராணுவம் அங்கு ஆக்கிரமிப்பு செய்கிறதென்ற ஒரு நிலையை வெளிப்படையாக கொண்டு வரவேண்டிய ஒரு தேவை ஏற்படும்.

□ இலங்கை, இந்தியாவின் அரசியற் புவியியலுக்குள் அடங்கியிருந்த போதும், ஈழத்தில் இந்தியாவுக்கு எதிரான உணர்வு ஒன்று தலை தூக்கியிருக்கிறதை காணக்கூடியதாக இருக்கிறது. இதற்கு பின்னணியாக வரலாற்று ரீதியான காரணங்கள் ஏதாவது இருக்க முடியுமென்று நீங்கள் கருதுகிறீர்களா ?

□ □ அநேகமாக ஆங்கிலத்தில் அதை Big Country, Small Country என்று சொல்லுவார்கள். எங்கேயும் பெரிய நாடுகளுக்கு பக்கத்திலிருக்கிற சிறிய நாடுகளுக்கெல்லாம் இந்த மாதிரி ஒரு நிலை இருக்கிறது. இங்கு வரலாற்று ரீதியாக நாங்கள் பார்க்கவேண்டும் என்று சொன்னால், இங்கிருந்து தென்னிந்திய படைகள், ஜெயவர்த்தனாவே சொன்னார், 17 வது invasion என்று. அந்தமாதிரி படையெடுப்புகள் ஓரிடத்தில் நடக்கும் பொழுது மக்கள் மத்தியிலே இந்த நாட்டுக்கெதிரான ஒரு எதிர்ப்பும் அந்த மாதிரியான ஒரு நிலைமையும் இருக்கக் கூடியதாக இருக்கும். இனி சிங்கள இனவெறியும், தமிழ் இனவெறியும் மிகவும் உச்சத்திலே நிற்கிற ஒரு நாடு.

□ ஈழப் போராட்டத்தின் இந்தப் போக்கிலே இந்திய இராணுவத்தை ஈழத்துக்குள் கொண்டு வராமலே, நீங்களே இந்தப் பிரச்சனையை தீர்த்திருக்க முடியுமென்று கருதுகிறீர்களா ?

□ □ நிச்சயமாக. இராணுவத்தை கொண்டு வராமல் என்று சொல்லுகிற பொழுது இரண்டு விதமாக இதை நாங்கள் பார்க்கலாம். Military Excalation என்று சொல்லுவார்கள். இராணுவத் தாக்குதல் முறை வளர்ந்து கொண்டு போகிறது என்று கூறுவார்கள். அவ்வாறே சிறிலங்காவினுடைய விமானத் தாக்குதலுக்கு மாற்று ஏற்பாடாக போராளிகளிடத்தில் எதுவும் இல்லை. அது மட்டும் இருந்திருக்குமாயிருந்தால் அங்கு ஒரு இராணுவ தோல்வி (Military defeat) அல்லது இராணுவ வெற்றி என்கிற நிலைமைக்கு இடமளித்திருக்க முடியாது. எனவே ஒரு Military Stalemate வெற்றியில்லாத ஒரு நிலை. நன்மைகள் சிலவேளை சிறிலங்காவிற்கு இருந்திருக்கலாம் அல்லது போராளிகளுக்கு இருந்திருக்கலாம். நிச்சயமாக திம்பு மகாநாட்டிற்கு போகும் போது Military advantage போராளிகளினுடைய கையிற்தான் இருந்தது. காலப் போக்கில் அது சிறிலங்காவினுடைய இராணுவத்திற்கு மாறியது. இந்தமாதிரியான ஒரு நிலைமையில் ஒரு பேச்சுவார்த்தைக்கு இந்தியா அந்த நேரத்தில் நடுநிலை வகித்து, இதே ஒப்பந்தத்தை இரு தரப்புக்கும் இடையிலேயே கொண்டு வந்திருக்கக் கூடிய ஒரு நிலைமையை உருவாக்கியிருக்கலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



☐ இப்படியான தவறுகளை எங்கேயிருந்து ஆரம்பித்தது என்று பார்க்க முடியுமா ?

☐ ☐ அடிப்படையில் திம்பு பேச்சு வார்த்தையின் முடிவிலே இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு தேசிய அந்தஸ்த்து என்று சொல்வதற்கும், தனிநாடு என்று சொல்வதற்கும் குறைந்த பட்ச தீர்வுதான் கொண்டுவர வேண்டுமென்ற தற்கும், இங்கு இயக்கங்கள் அரசியற் கட்சிகள் எல்லாம் ஒற்றுமையாக ஒரு நிலைப்பாட்டில் 4 அடிப்படைக் கோரிக்கைகளை கூறியது. அதிலே சில வடிவங்களில் வித்தியாசமிருந்தாலும் தேசிய அந்தஸ்துக்கு இட்டுச் செல்லும் அடிப்படைக் கோரிக்கைகளை முன்வைத்த நேரத்திலே இருந்து ஒரு மாற்றம் ஒன்று ஏற்பட்டது. அதாவது இயக்கங்களுக்கு இடையிலிருந்த ஒற்றுமையின்மை தான் இதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது. இந்த நிலைப்பாட்டுக்கு, அதிலேயிருந்து நான்கம்ச முடிவிலே தொடர்ந்து நாங்கள் ஒற்றுமையாக இருந்திருப்போமேயானால், இந்தியாவல்ல வேறு எந்த சக்தியும் அதற்கு மாற்றாக ஒரு தீர்வை அங்கு கொண்டு வந்திருக்க முடியாது. அதாவது பிறகு LTTEக்கும் TELOவுக்கும் மோதல் வந்த பொழுதோ அல்லது EPRLFக்கும் பிரச்சனை வந்த போதோ அதற்குபிறகும் LTTEம் அந்த 4 கோரிக்கைகளிலிருந்து நாம் மாறவில்லை என்றும், மற்ற அமைப்புக்களும் நாங்களும் எல்லோரும் ஒற்றுமையாகத்தான் நிற்போம் என்று ஒரு நிலைப்பாடு இருந்திருந்தால் இந்நிலை வந்திருக்காது. ஆனால் பதிலுக்கு பெங்களூருக்கு LTTE தனியே சென்ற போது எங்களுடைய ஒற்றுமை எல்லாம் இல்லாமல் போனது. நான்கம்ச கோரிக்கைகளுக்கும் குறைவாக எந்த ஒரு முடிவுக்கும் கொண்டு வரலாம் என்ற இந்திய அரசாங்கத்தின் முயற்சி, கடைசியிலே இவர்கள் எல்லோரையும் விட்டு நாங்களே ஒரு முடிவை கொண்டுவந்து 'இது தான் உங்களுக்கு, இந்தக் காலகட்டத்திலே எங்களைப் பொறுத்த வரையிலே சரியானது' என்ற நிலைக்கு கொண்டுவந்தது.

☐ ஒரு மத்தியஸ்த நிலையிலிருந்து தான் இந்தியா பணியாற்றியிருக்கிறதா இல்லை பாகஸ்தர் ஆகியிருக்கிறதா ?

☐ ☐ மத்தியஸ்தர் அல்ல. இதிலே, மத்தியஸ்தர் என்று நாங்கள் முன்னர் சொன்னதிலிருந்து இந்தியா விலகி அதிக நாட்களாகி விட்டது.

☐ மத்தியஸ்தர் இல்லையென்றால் இந்தியா என்ன நிலைப்பாட்டில் இருக்கிறது ? இந்தியாவை எப்படி பார்க்கிறீர்கள் ?

☐ ☐ கூடுதலாக தமிழர்களுடைய தீர்வு என்ன என்பதை தாங்களாகவே தனித்தே முடிவு ஒரு நிலையைத்தான் பார்க்க முடிந்தது. அண்மையிலும் கூட பிரதமர் ராஜீவ் காந்தி சொல்லியிருக்கிறார் எல்லா இயக்க தலைவர்களையும் சந்தித்த பிறகுதான் தான் இந்த ஒப்பந்தம் முடிவுக்குவந்ததாக. ஆனால் உண்மை நிலைவேறு. எங்களை சந்தித்தது ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முதல் நாள் இரவு. எந்த வகையிலும் இயக்கங்கள் முழுவதும் அதற்கு இணக்கம் தெரிவித்தன என்று இருக்கவில்லை.

☐ LTTEக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் ஏற்பட்ட பிரச்சனையிலிருந்து ஈரோஸ் மத்தியஸ்தராக பணியாற்றும் என்று கூறியது. அப்போது இரண்டு பேரையும் தொடர்பு கொண்டீர்களா ? ஈரோஸ், LTTE உடன் தொடர்பு கொண்டதா அல்லது இந்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டதா? அந்த நிலையில் LTTE என்ன கூறியது? இந்திய அரசு என்ன சொன்னது ?

☐ ☐ முதலில் நாங்கள் மத்தியஸ்தம் செய்கிறதென்ற விடயத்தை எடுப்பதற்கு சில அடிப்படைத் தேவைகள் இருந்தது. அதாவது LTTEயின் நிலைப்பாடு, மற்றது இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு. இதிலே நாங்கள் எடுத்த முயற்சியில் இந்தியஅரசாங்கத்தின் நிலைப்பாடு எக்காரணம் கொண்டும், ஆயுத ஒப்படைப்பு அடிப்படையிலே தான் எந்தவிதமான ஒரு பேச்சுவார்த்தைக்கும், முடிவுக்கும் அவர்கள் வருவதாக இருந்தது. LTTE ஐ பொறுத்த வரையில் எக்காரணம் கொண்டும் ஆயுத ஒப்படைப்பு செய்ய முடியாத நிலையை அவர்களுடைய அறிக்கையிலேயே தெரியப்படுத்திய நிலை இருந்தது. மத்தியஸ்தம் என்பதன் பங்கு இதனால் இல்லாமலே போய்விட்டது. அதை நாங்கள் மீண்டும் revive பண்ணப் பார்க்கிறோம் தமிழ் விடுதலைப் புலிகள், ஆயுத ஒப்படைப்புக்கு முன் நிபந்தனையாக எதுவும் இருக்க முடியாது; அதை செய்ய முடியாது என்று கூறுகிற போது மத்தியஸ்தம் செய்ய முடியாத நிலை காணப்பட்டது. ஆனால் அவற்றில் நாங்கள் இந்திய அரசாங்கத்தோடு தான் தொட கொண்டோமேயொழிய LTTEயுடன் அறிக்கைகள் மூலம் இருந்த நிலைப்பாட்டை வைத்துத்தான் பார்த்திருந்தோம். தொடர்பு கொள்வதற்கு சில முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது இன்னும் சரிவரவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*நூல் அறிமுகம்*

## விடுதலைப் பாதையில் இந்தியா

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் 1947 ஆகஸ்டு 15வது நள்ளிரவில் இந்தியா சுதந்திரம் பெற்றது. ஆனாலும் 30 ஆண்டுகளுக்குப் பின்னால்—தமிழகக் கவிஞன் ஒருவன் ''இரவில் வாங்கினோம், இன்னும் விடியவே இல்லை'' என்று எழுதினான்—தற்பொழுதும் கூட இந்தக் கவிதை வரிகள் உயிர்ப்புடனேயே இருக்கின்றன.

இந்தியா தனது விடுதலைப் பாதையில் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியையும், அகிம்சையையும் மட்டும் அழைத்து வரவில்லை. வங்கத்தில் யுகாந்தர், அனுசீலன் போன்ற அமைப்புக்களும், பஞ்சாபில் கதர்கட்சியும், உ.பி. யிலும் பீகாரிலும் ''இந்துஸ்தான் ஜனநாயக சங்கமும்'' போன்ற பிராந்திய அமைப்புக்களும், தேசிய அளவில் வேறூன்றிட முயன்ற 'நவ ஜவான் பாரத சபா, இந்துஸ்தான் சமதர்ம குடியரசு ராணுவம் போன்றதான புரட்சிகர இயக்கங்களையும் 'சுசீந்திரநாத் சன்யால், 'பகவத்சிங்', பகவதிசரண்வோரா', சுகதேவ், சந்திரசேகர ஆசாத் போன்றவர்களான புரட்சியாளர்களையும் இந்தியா தன் விடுதலைப் பாதையில் சந்தித்திருக்கிறது.

இவர்கள் பற்றியதான வரலாறுகள், இந்தியாவின் விடுதலைப் போராட்டத்திற்கான பங்களிப்புகள் காந்தியவாதிகளாலும், அகிம்சைப் போர்வையாளர்களாலும் மிகவும் திட்டமிட்டு மறைக்கப்பட்ட போதும் அந்த எரிமலைத் தியாகிகளின் வீச்சுக்களை இவர்களால் எதுவுமே செய்ய முடியவில்லை. ஆனாலும் இவர்களை தனிமனிதப் பயங்கரவாதிகளைப்போல் கொச்சைப் படுத்தவே முயன்றனர். புரட்சியாளன் பகவத்சிங்கை கார்க்கி நூலகத்தார் குறிப்பிடுவதுபோல் 'பகவத்சிங்கின் வீரத்தைப் பிரபல்யப் படுத்தியவர்கள்—அவர் ஒரு இயக்கத்தைச் சார்ந்தவர், இயக்கத்தைக் கட்டி எழுப்பியவர் என்பதைச் சொல்ல மறந்து போயிருந்தனர், அதிலும் அவர் ஒரு கம்யூனிஸ்ட் ஆக இருந்தது முற்றாகவே மறைக்கப்பட்டிருந்தது. இப்புரட்சியாளனால் 1926ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கப்பட்ட இயக்கம் தான் ''நவஜவான் பாரத சபை''.

ஈழத்துப் போராட்டம் கூர்மை பெறத் தொடங்கிய காலக் கட்டங்களில்—1975க்கு முன்னால் சில வீரர்கள் அன்றைய ஈழத்து இளைஞர்களின் இலட்சிய வீரர்களாய் மதிக்கப்பட்டு இருந்தனர். வாஞ்சிநாதனும், பகவத் சிங்கும் அயர்லாந்துப் போராளி 'தான்ஃபிரீனும், அன்றைய இளைஞர்களின் நேசத்துக்கு உரியவர்களாய் இருந்தார்கள். 'தான்ஃபிரீனின்' வாழ்க்கை வரலாறும், 'எரிமலைத் தியாகிகள்' என்னும் இந்திய சுதந்திர போராட்ட வீரர்கள் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளைக் கொண்டதான புத்தகமும் மிக ரகசியமாகவும் மிக அவசியமாகவும் அன்றைய போராட்டத்தில் ஈடுபட விரும்பிய இளைஞர்களுக்கு படிக்கக் கொடுக்கப்பட்டது. ஆனாலும் வெடிகுண்டு—வீசிய தூக்கில் ஏற்றப்பட்ட—பகவத் சிங்கைத்தான் அவ்விளைஞர்கள், அறிந்திருந்தார்களே தவிர, அவன் 'நாத்திகன்' என்பதையோ, கம்யூனிஸ்ட், என்பதையோ ஒரு இயக்கத்தை உருவாக்கி வழிநடத்தியவன் என்பதையோ அவ் ஈழத்து இளைஞர்கள் அறிந்திருக்க வில்லை. ஆனால், ஈழப்போராட்டம் பெற்றுத்தந்த அனுபவங்களும் தொடர்புகளும் அறிவுத்தேடலும் உலகின் பலபோராளிகள் பற்றியதான சரியான அறிமுகத்தைப் பெறக் கூடியதாய் இருந்தது.

'நவஜவன் பாரத சபை' பற்றியதான அறிமுகத்தை எஸ். கே. மித்தால், இர்பான்ஹபீப் ஆகிய இரு வரலாற்றுத்துறைப் பேராசிரியர்கள் எழுதியுள்ளனர். இதனைக் கார்க்கி நூலகத்தார் வெளியிட்டுள்ளனர். அவர்கள் குறிப்பிட்டபடியே தமிழின் முதல் மொழி பெயர்ப்பு நூலாகவும் இருக்கின்றதென்பது சிறப்பு அம்சமாகும்.

இன்றைய ஈழப்போராட்ட சூழ்நிலையில் அப்போராட்டத்தை முன் எடுத்த இயக்கங்கள் பற்றியதான குணாம்சத்தையும் வரலாற்றுப் பங்களிப்பு பற்றியும் மதிப்பீடு செய்வதற்கு வரலாறுகளில் முன்னரால் தோன்றி மறைந்த இயக்கங்கள் பற்றி அறிந்து கொள்வதென்பதும் ஆரோக்கியமானதாகும். இவ்வகையில் இந்நூலை போராட்ட ஆர்வலர்கள் படிப்பதென்பது பயன் உடையது.

கிடைக்குமிடம் 'பொன்னி' 12, முதல் பிரதான சாலை, நேரு நகர், சென்னை-20.

விலை ரூ. 4.00


---

☐ LTTE தொடர்ந்து இப்படியே போய்க் கொண்டிருக்குமானால் இந்திய ஆதிக்கம் இன்னும் அதிகமாகி விடும். அப்போது ஈரோஸ் என்ன செய்யும்?

☐ ☐ இது தொடர்ந்து இப்படியே நீண்ட நாட்களுக்கு போய்க் கொண்டிருக்க விடமுடியாது. அந்த நிலையில் நாங்கள் எங்களுடைய கடமையை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கும். அரசியல் ரீதியில் சில முடிவுகளை எடுத்து இந்திய ஆதிக்கம் இன்னும் அதிகம் வராமலிருப்பதற்கு என்ன நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்ளலாம்; இந்தியாவை எதிர்த்து அல்ல; ஆனால் தடைசெய்து குறைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈரோஸ் தனியாகவோ மற்ற அரசியல் கட்சிகளுடன் சேர்ந்தோ முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவை ஒன்று இருக்கும். ☐ **பேட்டி : வைகறை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இராணுவ உடுப்பில் சிறை பட்ட இராணுவ வீரனே

*மாக்சிம் கார்க்கி*

பிரெடரிக் நீட்சே தனது 'வெண்ணிற விலங்கு இயல்பிலிருந்து' பாசிஸ வெறியர்களுக்கான தத்துவார்த்த கலைப்படைப்புகளை படைத்தளித்தார். நீட்சேயின் கொலைவெறிச் சித்தாந்தத்திற்கு பெனிடோ முசோலினி தீவிர ஆதரவாளனாக விளங்குகிறார். இத்தாலிய கலைக் களஞ்சியத்திற்கு முசோலினி எழுதி வழங்கிய நூலொன்றில் நீட்சேயின் விலங்கியல்பிலிருந்து உதித்த நல்லொழுக்கப் போதனைகளைப் (?) கடைப்பிடித்து, லைபே-ஜம்-ஃபெர்ன்ஸ்டென் (Liebe zum Fernsten) எனும் தனது வல்லரசு வாதக் கொள்கையை விளக்கியிருக்கிறார். அவரது கொள்கை, சகோதர நாடுகளின் கருத்துக்களை ஆணவத்துடன் புறக்கணிக்கிறது. மனித இனத்தின் சமூக சமத்துவத்தை நிராகரிக்கிறது; அத்தோடு, பெருபான்மையினரின் ஆட்சியுரிமையையும் மறுக்கிறது.

முசோலினி லட்சக் கணக்கில் மக்களை கொன்றொழிக்கும் வல்லாட்சியாளர்களுடன் தோளிணைந்து நின்று தனது பேரரசுக் கோட்பாட்டை போற்றிப் புகழ்ந்து பேசி வருகிறார். மக்கள் எல்லோரையும் கட்டாய ராணுவச் சேவைச் செய்ய நிர்ப்பந்திக்கும் தனது யுத்த ஆதரவுக் கொள்கையை வெகுவாய் மெச்சி கொண்டாடி வருகிறார். மரிநெட்டி போன்ற உன்மத்தம் பிடித்த ராணுவ இயல் எழுத்தாளர்கள், முசோலினி முன் 'தீர்க்கத்தரிசிகளாய்' நின்று அவரது வல்லரசுவாதத்தின் எதிர்காலத்திற்கான உபதேசங்களை 'வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ''யுத்தம் மனிதனுக்கு பயன் மிக்கது'' என்றும் அவர்கள் கூறி வருகிறார்கள். இக்கருத்தை யுத்தத்தில் முறியடிக்கப் பட்டவர்கள் எப்படி ஏற்பார்கள்? தோல்வியுற்றவன் வெற்றி பெற்றவனை நோக்கி, ''ஏய், எவ்வளவு நேர்மையானவன் நீ! என்னைக் கைது செய்த நீ உண்மையிலேயே வீராதிவீரன்'' என்று வியந்து பாராட்டியதாய் எவரும் கேள்வி பட்டிருக்க முடியாது.

□

இந்தத் தலையீட்டு யுத்தகாலத்தில், பிரிட்டிஷ் ராணுவம் 'பாகு' என்ற இடத்தில் 26 அரசு உயர் அதிகாரிகளை சுட்டுக் கொன்றது. செக் நாட்டினர் 'கஜான்' சேமிப்புக் கிடங்கிலிருந்த தங்கங்களை சூறையாடிச் சென்றனர். பிரெஞ்சு மற்றும் கிரேக்க ராணுவங்கள் கெர்ஜானில் கொள்ளையடிக்கும் முயற்சியில் இறங்கிய போது, இந்த 'நேர்மைமிக்க போர்வீரர்கள் (?)' இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவி மக்களை கப்பல்துறை பண்டகச் சாலைகளில் அடைத்து, நெருப்பிட்டு, அவர்களை தீய்க்கு பலியாக்கினர். இதுபோலவே சைபீரியாவில் தலையீட்டுப் போரிலீடுபட்டிருந்த அமெரிக்க ராணுவமும் கமாண்டர் ஜெனரல் கிரேவ்ஸின் வழிகாட்டுதலின் கீழ் எண்ணெற்ற பச்சைப்படுகொலைகளை செய்தது. ஜெர்மன் ரத்தவெறி ராணுவம் உக்ரெய்னில் நடத்திய அட்டூழியங்களை இப்போது திரும்பவும் நினைவு கூர்வோம். இன்னும் பல மனிதத் தன்மையற்ற குற்றச் செயல்கள் ஐரோப்பியக் கலாச்சாரத்திற்கு மேன்மேலும் இழிவையும் அவமதிப்பையும் சேர்த்தன.

தொடர்ந்த தாக்குதல்களால் உடலூனம் அடைந்த பல்லாயிரக்கணக்கான ''மக்கள்-வெற்றியாளர்கள்'' ராணுவாதிக்கவாதிகளின் மற்றும் பாசிஸ்ட்டுகளின் 'யுத்தநேர்மை' குறித்து எந்தக் கருத்தையும் கொண்டிருக்கவில்லை. மாறாக, மனிதப் பண்பிழந்து மன ஊனமடைந்த அந்தப் 'பாசிச' வெறியாளர்களை' பழிதீர்க்க அவர்கள் எழுவார்கள்.

ஐரோப்பாவையும் அதன் கொலைகார கூலிப்படைகளையும் பைத்தியம் பிடித்த ஆதிக்க மனிதர்கள் அரசோட்சுகிறார்கள். அவர்களின் ஆட்சி நியாயம் கொலைக் குற்றங்களை தீயனவாக கருதுவதில்லை; சிந்தும் ரத்தத்திலிருந்து ஒரு சொட்டைக்கூட உள்ளீர்த்துக் கொள்ள அவர்கள் முயலப்போவதில்லை-ரத்தப் பெருக்கில் தான் அவர்கள் சந்தோசம் காண்கிறார்கள். அந்த அளவிற்கு, கதே, கான்ட், ஷில்லர், பிக்டே மேலும் பல நூற்றுக் கணக்கான நல்லறிஞர்கள், தத்துவமேதைகள், கவிஞர்கள், இசைக் கலைஞர்கள், ஓவியர்கள் வாழ்ந்த காலத்தை முற்றிலும் மறக்குமளவிற்கு, மானுடவாழ்வின் மீது அவர்கள் எழுப்பிய மகோன்னதங்களை தொலைத் தொழிக்கு மளவிற்கு, சித்தம் குழம்பிய நிலையின் உச்சத்தை பாசிசம் அடைந்திருக்கிறது.

(1932)

தமிழில்: ஜே. சாந்தாராம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நட்புறவு பாலம் 1987 நவம்பர் விலை ரூ. 1.50 பதிவு எண் : டி. என். எம். எஸ். (எஸ்). 371

# சூரியனோடு பேசுதல்

கண்மலர
நாள் விடியும்.

ஓடுகின்ற பஸ்சின் வெளியே
என்றும் இளமை மாறாத எம் உலகம்
மஞ்சள் முகம் மலர
சினத்துத் தேவதையாய்
சுவர்க்கம் இருந்து
சூரியன் எழுந்து வரும்.

கரும்புத் தோட்டத்தின் மீது
கழிகின்ற கிராமத்து வீதிகளில்
தொழிற்சாலை ஒன்றின் இரும்புக் கழிவுகளில்
தலை நிமிர உள்ள மானுடத்தின்
பாதை திசையெல்லாம் இருள் துடைத்து
நம்பிக்கைக் கோலம் எழுதுகிற சூரியனே
நேற்று அதிகாலை
என்னுடைய தாய் நாட்டின் காடுகளில்
துணை வந்த தோழர்களோடு
உன்னை நான் எதிர் கொண்டேன்.
நேற்று இள மாலையிலே
இருள் கவியும் கடல்மீது
போராடி முன்னோக்கும் படகில்
பிரியும் உன்முகம் நோக்கி
உள்ளம் கிளர்ந்திருந்தேன்.
இன்று அதிகாலை
தமிழகத்தில்
ஓடுகின்ற பஸ்சின் ஜன்னலால்
முத்த மிட்டாய்.

கண் விழித்த என்றன் கைகளுக்குள்
ஒரு புதிய நாளைப் பரிசு தந்தாய்
தீ நடுவே ஒரு பூவாய்
போர்க்களத்தில் உயிர்த்திருக்கும்
எங்களது வாழ்வுக்கு
இந்நாளை நான் தருவேன்.
மீண்டுமென் தாய் நாட்டின்
கரைகளிலே
எம்முடைய கால்களிலே எழுந்துநின்று
உனைக்காணும் நாட்களை மீட்டெடுக்க
இந்நாளை நான் தருவேன்.

□ வ. ஐ. ச. ஜெயபாலன்

